# மனதில் உறுதி வேண்டும்



அ.விஷ்ணுவர்த்தினி

ஜீவநதி வெளியீடு

# மனதில் உறுதி வேண்டும்

## (சிறுகதைகள்)

அரியரத்தினம் விஷ்ணுவர்த்தினி

'ஜீவநதி' வெளியீடு
கலை அகம்
அல்வாய் வடமேற்கு
அல்வாய்.

மனதில் உறுதி வேண்டும்

சிறுகதைகள்

© அ.விஷ்ணுவர்த்தினி

| | |
|---|---|
| முதற் பதிப்பு | : 2010 ஏப்ரல் |
| விலை | : ரூ.200 |
| நூலாக்கக் குறிப்புகள் | : டெம்மி $^{1}/_{8}$<br>பக்கங்கள் xii + 60<br>12 புள்ளி எழுத்துகள் |
| அட்டை வடிவமைப்பு | : க.பரணீதரன் |
| அட்டைப்படம் | : நன்றி (இணையம்) |
| ஆசிரியர் முகவரி | : மலையந்தோட்டம்<br>கரணவாய் வடமேற்கு<br>வல்வெட்டித்துறை. |
| வெளியீடு | : 'ஜீவநதி'<br>கலை அகம்<br>அல்வாய் வடமேற்கு<br>அல்வாய். |
| அச்சுப்பதிப்பு | : Caxton printers |
| ISBN - No. | : |

எனது தாத்தா
அமரர் ஆ.கிருஷ்ணபிள்ளை (ஆசிரியர்)
அவர்களுக்கும்
எனது பெரியப்பா
அமரர் வை.பச்சைமால் (வைத்தியர்)
அவர்களுக்கும்
இந்நூல் சமர்ப்பணம்.

# நன்றி

க.பரணீதரன் க.மதனாஹரன்
செங்கதிர் யாழ்.தினக்குரல் மல்லிகை
ஞானம் ஜீவநதி படிகள்
கதிரவன்

# உள்ளே...

பதிப்புரை

வாழ்த்துரை

முன்னுரை

என்னுரை

ஆர் கொலோ

யாரொடு நோகேன்

மனத் தாங்கல்கள்

மனதில் உறுதி வேண்டும்

நெஞ்சு பொறுக்குதில்லையே

மாறும் மானுடங்கள்

மிடிமையில் அழிந்திடேல்

மறுவாழ்வு

உன்னை நம்பித் தானே

புரிந்துணர்வு

# பதிப்புரை

நூல் வெளியீட்டில் 'ஜீவநதி' காலடி எடுத்து வைத்த போது, 2009 ஆவணியில் கலாநிதி த.கலாமணியின் 'பாட்டுத்திறத்தாலே...' எனும் சிறுகதைத் தொகுதியை முதன் முதலில் வெளியிட்டு வைத்தது. அ.விஷ்ணுவர்த்தினியின் 'மனதில் உறுதி வேண்டும்', 'ஜீவநதி' வெளியீடு செய்யும் இரண்டாவது நூல்.

இச்சிறுகதைத் தொகுதியின் ஆசிரியை அ.விஷ்ணுவர்த்தினி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவி ; இலக்கியத்தில் ஆர்வம் உள்ளவர். எஸ்.பார்வதி, ருக்மணி என்ற புனைபெயர்களிலும் எழுதி வருபவர். அண்மைக் காலமாக ஈழத்தில் வெளி வந்து கொண்டிருக்கும் சஞ்சிகைகள் பலவற்றில் அவரின் சிறுகதைகள் பிரசுரமாகியுள்ளன. விஷ்ணுவர்த்தினியின் சிறுகதைகளில் காணப்படும் சமுதாயப் பார்வை அவரை நல்லதோர் எழுத்தாளராக ஈழத்து இலக்கிய உலகிற்கு இணங் காண வைக்கும் என்ற நம்பிக்கையோடு, அவர் எழுதிய பத்துச் சிறுகதைகளைத் தொகுத்து 'மனதில் உறுதி வேண்டும்' என்ற சிறுகதை நூலாக 'ஜீவநதி' வெளியிட்டு வைக்கின்றது.

இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கில் இயங்கும் 'ஜீவநதி', விஷ்ணுவர்த்தினியின் இந் நூலை வெளியிட்டு வைப்பதில் பெருமை கொள்கிறது. தொடாந்தும் பல இளம் எழுத்தாளர்களின் நூல்களுக்கு 'ஜீவநதி' பிரசுர களம் அமைத்துக் கொடுக்கும்.

*க.பரணீதரன்*
*பிரதம ஆசிரியர் 'ஜீவநதி'*
*2010 - 04 - 09*

*கலை அகம்*
*அல்வாய் வடமேற்கு*
*அல்வாய்*

# நல்வாழ்த்துக்கள்

அண்மைக் காலத்தில் இலக்கியம் படைப்பதில் புதிய உத்வேகமும் ஆர்வமும் இளம் படைப்பாளிகளிடத்து பெருமளவு காணப்படுகின்றது. அதே உத்வேகம், ஆர்வம் தமது படைப்புகளை நூல்களாக வெளியிடுவதிலும் காட்டுகின்றார்கள். செல்வி அரியரத்தினம் விஷ்ணுவர்த்தினி எழுத்துலகில் அடி எடுத்து வைத்து இரண்டு ஆண்டுகள். இந்தக் குறுகிய காலத்தில் ஈழத்தின் முக்கியமான இலக்கியச் சஞ்சிகைகளில் எல்லாம் சிறுகதைகள் எழுதி வந்திருக்கின்றார். அந்தச் சிறுகதைகள் பத்தினைத் தொகுத்து 'மனதில் உறுதி வேண்டும்' எனத் தருகின்றார். ஆக்க இலக்கியத்துறையுடன் ஈடுபாடு கொண்டுள்ள பெண்கள், தொகையில் மிகக் குறைவு. எம்மவர்கள் ஆண்களின் குரல்களிலேயே பேசினார்கள். இன்று ஆண் விரோதக் குரலில் பேசுவதை மாத்திரம் தவறான புரிதலுடன் சிலர் செய்து வருகின்றார்கள். பெண்ணின் பார்வையில், பெண்ணின் குரலாக, பெண்ணின் இதயம் பேசும் படைப்புக்கள் பெருமளவு இன்று எதிர் பார்க்கப்படுகின்றன.

விஷ்ணுவர்த்தினி போன்ற இளம் படைப்பாளிகள் அந்த இடத்தை நிரப்ப வேண்டும். அதற்கான மன உறுதியை, பார்வை விசாலிப்பை படைப்பாற்றலை மேலும் வளர்த்து, அந்த எதிர்பார்ப்பை ஈடும் செய்யும் படைப்புக்களை எதிர்காலத்தில் இவர் தருவாரென்ற நம்பிக்கை எனக்குண்டு. தர வேண்டும்மென்னும் பேரவாவுடன் எனது நல்வாழ்த்துக்கள்.

07-04-2010

***தெணியான்***

# முன்னுரை

அரியரத்தினம் விஷ்ணுவர்த்தினி, எனக்கு அவரது எழுத்துக்கள் மூலம் மிகவும் அறிமுகமானவர். ஆனால், என்றுமே எதிர்கண்டு பழகியிராத ஒருவர்.

இளம் எழுத்தாளரான அவரது பத்துக் கதைகளை உள்ளடக்கி இச்சிறுகதைத் தொகுதி ஜீவநதி வெளியீடாக வெளிவருகிறது. செங்கதிர், யாழ். தினக்குரல், மல்லிகை, ஞானம், ஜீவநதி, படிகள், கதிரவன் ஆகிய சஞ்சிகைகளில் பிரசுரமான சிறுகதைகளே இவை. இக்கதைகளுள் ஒன்றின் தலைப்பாகிய 'மனதில் உறுதி வேண்டும்' என்பதே தொகுப்பின் தலைப்பாகவும் அமைந்துள்ளது.

அனைத்துக் கதைகளையும் வாசித்து முடிந்ததும் இவற்றின் ஆக்க கர்த்தா ஓர் இளம் எழுத்தாளர் என மனத்திற்குள்ளே தோன்றுகிறது.

தன் மனதைத் தொட்ட அல்லது தன்னை ஆழமாகப் பாதித்த ஒன்றிற்கு கற்பனை உருக்கொடுத்துக் கதையாக்கி அதனைச் சுவைபடத் தனக்கே உரித்தான பாணியில் ஓர் எழுத்தாளன் கதைகளை எழுதுகின்றான். தன்னைச் சுற்றி நடமாடித் தன்னுடன் பழகுபவர்களையும் தன் சூழலையும் அவன் கூர்ந்து கவனித்து வருவான். தகுந்த தருணங்களில் அவனது எழுத்துக்களிடையே அவன் கவனித்தவை இடம்பிடித்துக் கொள்ளும்.

எழுத்தாளர் இளம் வயதினர் என்பதாலேயே இத்தொகுப்பிலுள்ள பெரும்பாலான கதைகளிலே இளம் பருவக் கதாபாத்திரங்களே முக்கிய இடம் வகிக்கின்றன. பாடசாலைக் காலம், பல்கலைக்கழக வாழ்வு, திருமண நிச்சயிப்பு நிகழ்வுகள் போன்றன கதைகளாகப் பரிணமித்துள்ளன.

எல்லாக் கதைகளும் அப்படியானவை என நான் கூற வரவில்லை. "ஆர் கொலோ" கதையின் கந்தையாக் கிழவனும் விஷ்ணுவர்த்தினியால் மிக அற்புதமாக உருவாக்கப்பட்ட கதாபாத்திரமாகும்.

தன்னைச் சுற்றியுள்ள சமுதாயத்தில் மலிந்து கிடக்கும் மலினங்களைக் கண்டு மனவேதனைப்படுபவராக விஷ்ணுவர்த்தினி தன் சிறுகதைகளுக்குள் தோற்றம் காட்டுகிறார். ஏழ்மை தரும் தாங்கொணா வலிகள் கதாசிரியரை ஆழமாகத் தாக்கியுள்ளன போலும். அதன் காரணமாகவே ஆர் கொலோ, மனத் தாங்கல்கள், மனதில் உறுதி வேண்டும், மாறும் மானுடங்கள், மிடிமையில் அழிந்திடேல் ஆகிய சிறுகதைகளாக வறுமையின் கோரத் தாண்டவத்தினது வெவ்வேறு வடிவங்களைச் செதுக்கியெடுத்துள்ளார். யாரொடு நோகேன் போன்ற ஏனைய சிறுகதைகளிலே கூட வறுமையின் கசப்பு கலந்தே கிடக்கின்றது.

நம் நாட்டுப் பிள்ளைகள் அனைவரும் வறியவர், செல்வந்தர் என்ற பேதமின்றிக் கல்வி கற்க வசதியாக இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இருந்தும் கல்விக்காக மேலும் பணத்தைச் செலவு செய்யும் நிலையை நாம் தான் ஏற்படுத்தியுள்ளோம். இதனால் ஏழைகள் அல்லற்படுவது பற்றிச் சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம்.

பாடசாலைக் கல்வி போதாதென்று தத்தி நடை பயிலும் குழந்தைப் பருவத்திலிருந்து பிரத்தியேக வகுப்புக்கள், பல்கலைக்கழகம் சென்றதும் வெவ்வேறு ஆடம்பர நிகழ்வுகள் எல்லாவற்றுக்கும் பணம் வேண்டும். பல்கலைக்கழகக் கல்வி இலவசமாக வழங்கப்பட்டு, ஏனைய செலவுகளுக்காக மகாப்பொல போன்ற பண உதவிகள் செய்யப்பட்டாற் கூட ஈடு செய்ய முடியாத செலவுகளை நாம் ஏற்படுத்தத் தான் வேண்டுமா? என்பதை எமது சமுதாயம் சிந்திக்க வேண்டிய அவசியத்தை 'மிடிமையில் அழிந்திடேல்' சிறுகதை வலியுறுத்துகின்றது.

பல்கலைக்கழகம் சென்ற பிரதீபா அங்கு இடம்பெறும் சாறி வாரத்தை எதிர்நோக்கித் தவிப்பதையும்

“இவ்வளவு நாளும் மற்றவையட்ட உடுக்கத் துணி தான் கேட்காமலிருந்தம். ஆனால், அந்தக் கடவுள் அதையும் கேட்க வைச்சிட்டானே”

எனக் கண்ணீர் வடிப்பதையும் அக்கதை உருக்கமாகக் கூறுகிறது. அப்படிப் பிரதீபா போன்றவர்களை இரங்க வைத்தது கடவுள் அல்ல, நாம் தான் என எண்ணத் தோன்றுகிறது.

நமது சமூகத்தின் மற்றுமொரு சாபக்கேடான சாதி பேதத்தையும் ஆசிரியர் தனது கதைகளிலே சாடுகின்றார். புராணக் கதைகளிலே அசுரனைக் கொன்றதும் வேறோர் உருவில் அவன் தோன்றுவான். அல்லது அவனது இரத்தத் துளிகள் அசுரர்களாக மீண்டும் உருவெடுக்கும். சாதி வேற்றுமையும் எமது சமூகத்தில் இவ்வாறு தான் பல்வேறு மாற்றுருவங்கள் எடுத்துச் செய்யும் அக்கிரமங்களை ‘மனத்தாங்கல்கள்’, ‘நெஞ்சு பொறுக்குதில்லையே’ ஆகிய கதைகள் மனதைத் தொடும் வகையில் கூறுகின்றன.

‘மனதில் உறுதி வேண்டும்’ என்ற தலைப்புக்கிணங்க இந்தக் கஷ்டங்கள், வேதனைகளுக்கிடையே எதிர்நீச்சலிடும் துணிவைத் தன் கதா பாத்திரங்களுக்கு ஊட்டியிருக்கிறார் விஷ்ணுவர்த்தினி. அவரது மகேஸ்வரி, பிரதீபா, நிருபா முதலான பாத்திரங்கள் கலங்கினாலும் பின்னர் துணிவோடு வாழ முற்படுவோராகப் படைக்கப்பட்டிருப்பது பாராட்டப்பட வேண்டியதாகும்.

கதைகளில் வந்து நடமாடிய பாத்திரங்களில் கந்தையாக் கிழவனும் மகேஸ்வரியும் மனதில் நிலைத்திருக்கின்றனர். பத்துக் கதைகளுள்ளும் ஆர் கொலோ, புரிந்துணர்வு ஆகிய இரு கதைகளும் எனக்கு அதிகம் பிடித்தமானவையாக அமைந்திருந்தன.

இக்கதைகளைத் தொகுக்கும்போதும் இதே எண்ணம் தான் இவ்விரு கதைகளையும் முதலும் இறுதியுமாகப் போட வைத்ததோ? என எனக்குள் ஒரு வினா.

சிறுகதைத் தொகுதியை வாசித்து என் எண்ணங்களை ஓரளவு பதிய வைத்த பின்னர் தான் கதாசிரியர் பற்றிய சில தகவல்கள் என் காதிற்கு மெல்ல வந்து சேர்ந்தன. அவர் யாழ். பல்கலைக்கழக மாணவி. பார்வதி, ருக்மணி என்னும் பெயர்களிலும் சிறுகதைகள் புனைந்துள்ளார்.

இருபதை எட்டிய இளம் எழுத்தாளரின் முதலாவது சிறுகதைத் தொகுதி இது. இதைக் கண்டதும் அவரது வார்த்தைகளிலேயே சொல்வதானால் "உலகமே தன் கையிலடங்கியது போல் மகிழ்ச்சியின் உச்சக் கட்டத்திற்கு"ச் சென்றிருப்பார். எமக்கும் ஒரு சந்தோஷமேற்படுகிறது.

வயல் வெளியிலேயே விதைத்த நெல் மணிகள் முளைத்துப் பயிராகி நீரிடையே நின்று அசைந்தாடும் போது பார்ப்பவருக்கு மனமெங்கும் மகிழ்வு பொங்கிப் பிரவாகிக்கும். காரணம் அதன் அழகு மட்டுமென்று கூறி விடமுடியாது. "நாளை கதிர் கனக்க அது செழித்து நிற்கும் காட்சியையும் கண்டு ஆனந்திக்கலாம்" என்ற நம்பிக்கையும் மனத்துள் உருவாகி விடுவதும் மற்றுமொரு காரணமாகும்.

விஷ்ணுவர்த்தினியின் ஆர்வமும் திறமையும் மேலும் வளர்ந்து வர அனுபவ முதிர்வு ஏற்பட ஏற்பட அவரிடமிருந்து மிகச் சிறந்த படைப்புக்கள் எமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் இத்தொகுதி தருகிறது.

அவரும் அவரது இலக்கியத் திறனும் சிறந்தோங்கி வளர இறையருளை வேண்டி நிற்கிறேன்.

*யோகேஸ்வரி சிவப்பிரகாசம்*
*மயூரம்*
*கோப்பாய்*
*2010 - 04 - 08*

# என்னுரை

'மனதில் உறுதி வேண்டும்' எனது முதலாவது சிறுகதைத் தொகுதி. இத் தொகுதியில் எனது பத்துச் சிறு கதைகள் இடம் பெற்றுள்ளன. நான் வாழும் வடமராட்சிப் பிரதேச மக்களின் வாழ்வுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், மனத்தாக்கங்கள், ஏக்கங்கள், நம்பிக்கைகள், சிந்தனைகள், கனவுகள் என்பவற்றைத் தரிசித்த வகையில் பெண்ணியக் கொடுமை, சாதியக் கொடுமை, சமூக நடத்தை, குடும்ப உறவு, புரிந்துணர்வு போன்ற கருப்பொருள்களைக் கொண்டு இச்சிறுகதைகளைப் படைத்துள்ளேன். எனது வீடு தொடக்கம் இன்று நான் கல்வி கற்கும் பல்கலைக்கழகம் வரை நான் பெற்ற அனுபவங்கள் இச்சிறுகதைகளுள் கலந்துள்ளன.

நீண்ட காலமாக நல்ல நூல்களை வாசித்துக் கொண்டிருந்த என்னுள் சிறுகதை எழுதும் ஆர்வத்தைத் தூண்டியவர் 'ஜீவநதி' ஆசிரியர் க.பரணீதரன் ஆவார். கிழக்கிலிருந்து வெளிவரும் 'செங்கதிர்' சஞ்சிகை 'உன்னை நம்பித்தானே' என்ற என் சிறுகதையைப் பிரசுரித்து இலக்கிய உலகிற்கு என்னை அறிமுகஞ் செய்தது. ஞானம், மல்லிகை, யாழ்.தினக்குரல், ஜீவநதி, படிகள், கதிரவன் ஆகிய சஞ்சிகைகளும் எனது சிறுகதைகளைப் பிரசுரித்துள்ளன. இச் சஞ்சிகையாளர்களுக்கு என் நன்றிகள்.

தனது சிறுகதைகளால் என்னை ஈர்த்து என்னை எழுதத் தூண்டியவர்களுள் யோகேஸ்வரி சிவப்பிரகாசம் முக்கியமானவர். இந்நூலிற்கான முன்னுரையை அவரே எழுதியிருப்பது எனது சிறுகதைகளுக்கு கிடைத்த அங்கீகாரம் என்றே சொல்ல வேண்டும். வாழ்த்துரையை நாடறிந்த எழுத்தாளர் தெணியான் வழங்கியுள்ளார். இவர்களுக்கும் என் நன்றிகள். மேலும், இச்சிறுகதைகளைக் கணினியில் பொறித்துத் தந்த க.மதனாஹரன், என்னை ஊக்குவித்துக் கொண்டிருக்கும் கலாநிதி த. கலாமணி, என் அப்பா, தங்கை விஷ்ணுமைத்திரேயி ஆகியோருக்கும், இந்நூலை வெளியீடு செய்யும் 'ஜீவநதி' வெளியீட்டகத்தினர்க்கும், நூலை வடிவமைத்து அச்சுப் பதித்துத் தந்த caxton அச்சகத்தினர்க்கும் நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளேன்.

*அ. விஷ்ணுவர்த்தினி*
*(நூலாசிரியை)*
*2010 - 04 - 10*

*மலையந்தோட்டம்*
*கரணவாய் வடமேற்கு*
*கரணவாய்*

# ஆர் கொலோ...

ஆனி மாதத்து வெயில் தலையைப் பிளக்கிறது. கந்தையாக் கிழவனுக்கு வெளிச்சம் பட்டுக் கண்கள் கூசத் தொடங்கின. தெருவில் வருவோர் போவோர் எல்லோரும் கிழவனின் கண்களுக்கு மங்கலாகவே தெரிந்தனர். நீண்ட தடியொன்றினால் தட்டித் தட்டி கந்தையாக் கிழவன் நடந்து கொண்டிருக்கிறார். வெட்டப்படாமலிருந்த தலை முடியும் சவரம் செய்யப்படாமல் நீண்டு வளர்ந்திருந்த தாடியும் அவரின் குடும்ப நிலையை உணர்த்தின. அரையிலே உடுத்தியிருந்த வேட்டியின் நிறம், தோய்த்து பல நாட்கள் ஆகிவிட்டன என்பதைக் காட்டியது.

கந்தையாக் கிழவன் தன் ஒட்டிய உடம்பில் சுற்றியிருந்த வேட்டியின் ஒரு தொங்கலில் போட்டிருந்த முடிச்சை தொட்டுப் பார்த்து பத்திரப்படுத்திக் கொண்டார். தன் தூரத்துச் சொந்தக்காரர்களிடமிருந்து வீடு வீடாய் ஏறி இறங்கிச் சேர்த்த இரண்டாயிரத்து நானூறு ரூபாப் பணம் அந்த முடிச்சில் தான் இருக்கிறது. அப்பணத்தைக் கொண்டு தான் கந்தையாக் கிழவன், தன் குழி விழுந்த கண்ணுக்கு அறுவைச் சிகிச்சை செய்யவேண்டும். அதனால் தான் அப்பணத்தை அடிக்கடி தொட்டுப் பார்த்து பத்திரப்படுத்திக் கொண்டார்.

தவமணி ரீச்சர் வீட்டு நாய், கந்தையாக் கிழவனைப் பார்த்து குரைத்து அவரின் வருகையை வீட்டுக்குத் தெரிவிக்கிறது. தவமணி ரீச்சர் வெளியே வருகிறாள். வழமையாக அவ்வீட்டில் மழைக் காலத்தில் புல் வெட்டி துப்பரவு செய்தல், விறகு பிளந்து கொடுத்தல் போன்ற வேலைகளை கந்தையாக் கிழவனே செய்து கொடுப்பது வழக்கம். ரீச்சரும் அதற்கேற்ப கூலி கொடுப்பாள். அதை வைத்துத் தான் கிழவன் தன் மகளையும் இரு கால்களும் ஊனமான தனது பேத்தியையும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்.

“வாங்கோ ஐயா” என்று ரீச்சர் கந்தையாக் கிழவனை வழமையான பரிச்சயத்தோடு வரவேற்றாள்.

கந்தையாக் கிழவன் அமைதியாக எதுவுமே பேசாமல் மௌனமாக இருந்தார். தவமணி ரீச்சர் கிழவனுக்கு எவ்வகையிலும் உறவு இல்லை. ஆனபோதிலும், ரீச்சர், கிழவனின் உறவினர்களை விட அவர் மேல் மிகுந்த அன்புடையவள். கிழவன் அவ்வீட்டில் வேலை செய்யும் போதெல்லாம் அடிக்கடி சாப்பாடு, தேநீர் கொடுப்பாள். அதுமட்டுமில்லாமல் அவருக்கு அணிந்து கொள்ள நல்ல வேட்டி, சட்டை கொடுப்பதோடு மட்டுமல்லாமல் அடிக்கடி பணமும் கொடுப்பாள். இப்படி நிறைய உதவிகளை செய்துகொண்டிருக்கும் ரீச்சரிடம் கண்ணுக்குச் சிகிச்சை செய்யவும் பணம் எப்படிக் கேட்பது என்ற தயக்கமே அவரை மௌனம் காக்க வைத்தது.

கிழவனின் மங்கிய கண்ணிலிருந்து நீர் ஒழுகிக் கொண்டிருப்பதைக் கண்ட தவமணி ரீச்சருக்கு மனம் பரிதவித்தது.

“என்னையா, கண்ணில இருந்து நீர் வடியுது. கண்ணில ஏதும் பிரச்சினையோ?” இவ்வாறு ரீச்சர் கண்ணைப் பற்றிக் கேட்டதும் ரீச்சரிடம் பணம் கேட்பதற்கு இது தான் ஒரு சந்தர்ப்பம் என்று கிழவன் நினைத்தார்.

“அது ஒண்டுமில்லை பிள்ளை. கண்ணில ஏதோ சவ்வு வளந்திட்டுதாம். அதுதான் இப்பிடி நீர் வடியுது. இதோட பெரிய கஸ்ரமாக் கிடக்கு. அதுதான் பிள்ளை, போன கிழமை பெரியாஸ்பத்திரியில் போய்க் காட்டினனான். அவங்கள் தான் சொன்னவங்கள் சவ்வு வெட்ட வேணுமாம்”

"அப்படி என்றால் அந்த ஒப்பரேசனை செய்யுறது தானே. உங்களை இப்படிப் பார்க்க எனக்கு மனக்கஸ்ரமாக் கிடக்கு"

கந்தையாக் கிழவன் பதில் எதுவும் பேசாமல் மீண்டும் மௌனமானார். அவரின் தயக்கத்தைப் பார்த்து ஏதோ விளங்கிக் கொண்டவளாய் ரீச்சரே மீண்டும் தொடர்ந்தாள்.

"ஏன் ஐயா பேசாமல் இருக்கிறியள். காசு ஏதும் பிரச்சினையே... என்னெண்டாலும் தயங்காமல் கேளுங்கோ" இப்படி ரீச்சர் கூறியதும் கந்தையாக் கிழவன் ரீச்சரை நன்றிப் பெருக்குடன் பார்த்தார்.

"என்ர ரண்டு பிள்ளைகளும் என் மேல இவ்வளவு பாசமாக இருந்ததில்லை. ஆனால் நீ என் மேல இப்படி பாசமாக இருக்கிறியேயம்மா. நானும் என்ர ஒரே ஒரு மகனை பாசமாத் தான் வளர்த்தனான். ஆனால் அவன் எங்களையெல்லாம் ஏமாத்திப் போட்டான். அவன் கண்டியில போய்ப் படிக்க வேணும் எண்டதுக்காக நான் ஓடாய்த் தேய்ஞ்சு உழைச்சது மட்டுமில்லாமல் என்ர காணியையும் வித்துத் தானே அவனை படிக்க வைச்சனான். அவன் என்ஜினியராக வந்து அவன்ர தமக்கையையும் அவளின்ர பிள்ளையையும் காப்பாத்து வான் எண்டெல்லே நினைச்சன். ஆனால் அவன் சிங்களத்தியோட ஓடி எங்களெல்லாரையும் நடுத்தெருவில விட்டிட்டுப் போட்டான்" என்றபடி கிழவன் தன் கழுத்திலிருந்த நைந்த துவாயால் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

கந்தையாக் கிழவன் இப்படி கவலைப்படுவதைப் பார்த்ததும் தவமணி ரீச்சருக்கு, எப்படி ஆறுதல் கூறுவதென்றே தெரியவில்லை. கிழவன் எத்தனையோ எதிர்பார்ப்புக்களுடன் கஸ்ரப்பட்டு வளர்த்த மகன் இப்படிச் செய்ததை ரீச்சராலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மீண்டும் அவரே தொடர்ந்தார்.

"கண்ணில ஒப்பரேசன் செய்ய ஐயாயிரம் ரூபா வேணுமாம் பிள்ளை. இனிமேல் என்ர மகனோட எந்த உறவுமே வைக்கிறேல்லை என்றிருந்த நான், மனதைக் கல்லாக்கிக் கொண்டு, நேற்றுக் காலமை அவனோட ரெலிபோனில கதைச்சனான். அவன் வேண்டாவெறுப்பாத் தான் கதைச்சவன். என்ர மகன்

தானே என்ற உரிமையோட, ஒப்பரேசனுக்கு காசு கேட்டன். அவனுக்கு இப்ப தான் குழந்தை பிறந்திருக்காம்... அதனாலை நிறைய செலவெண்டு சொல்லி ரெலிபோனை வைச்சிட்டான் பிள்ளை"

"இனி என்னையா செய்யுறது. எல்லாம் விதி தான். இந்தக் காலப் பிள்ளையளெல்லாம் சொகுசு வாழ்க்கையைத் தான் விரும்புதுகள். நாங்கள் கஸ்ரப்பட்டு அதுகளை வளர்த்துவிட, அதுகள் பிறகு எங்களை மறந்து வாழுதுகள். ஒரு காலத்தில தாய் தகப்பனா வரும்போது நாங்கள் பட்ட கஸ்ரங்களை அவையளும் அனுபவிப்பினம். அப்பத் தான் தெரியும் நாங்கள் எவ்வளவு கஸ்ரப்பட்டு அதுகளை வளர்த்தம் என்று... அதை விடுங்கையா. பூமலர் சுகமா இருக்கிறாளே. எனக்கொரு சாறிச் சட்டை தைக்க வேணும். போகும்போது தாறன். கொண்டுபோய்க் கொடுங்கோ"

"பூமலர் என்ர மகளாப் பிறந்து எவ்வளவோ கஸ்ரத்தை அனுபவிச்சுப் போட்டாள் பிள்ளை. பிரியனைத் தின்னி அந்தப் பிள்ளையோட எவ்வளவு கஸ்ரப்படுறாள். நானும் அங்க இங்க கூலி வேலை செய்து தான் அவளைக் கவனிக்கிறன். ஆனால் அவள் ஊனமான தன்ர மேளுக்கு சில்லு வண்டி வாங்கிக் கொடுக்க வேணுமெண்டு இரவு பகலாய் தையல் மெசினோடேயே இருக்கிறாள்..." கிழவர் பெருமூச்செறிந்தார்.

தவமணி ரீச்சர் அறைக்குள் சென்று கையில் பணத்துடன் வந்தாள்.

"இந்தாங்கோ ஐயா, இதில ரெண்டாயிரம் ரூபா இருக்கு. இதை வச்சு ஒப்பரேசனைச் செய்யப் பாருங்கோ. அடுத்த மாதச் சம்பளம் வந்தவுடனே இன்னும் கொஞ்சக் காசு தாறன்"

கிழவனுக்குக் கண் கலங்கியது. "இது போதுமம்மா. நான் என்ர சொந்தங்களிட்டயும் போய் கொஞ்சக் காசு சேத்திட்டன். இது போதுமம்மா" கையெடுத்துக் கும்பிட்டு விட்டு கிழவன் தன் வீடு நோக்கிச் செல்கிறார்.

கந்தையாக் கிழவனின் வீட்டில் அவரது பேத்தி கண்மணி முற்றத்தில் இருந்து அழுது கொண்டிருப்பது அவர் காதில் கேட்கிறது. ஓடிப்போய்ப் பிள்ளையைத் தூக்கி அணைத்தபடி கேட்டார்.

"கண்மணிக் குஞ்சு, ஏனம்மா அழுறாய். அம்மா பிள்ளையை அடிச்சிட்டாளே"

குழந்தை பதில் எதுவும் சொல்லாமல் அழுது கொண்டேயிருந்தது. பூமலர் வந்து அவரின் கேள்விக்குப் பதில் சொன்னாள்.

"பாருங்கோ ஐயா இவளை. எங்கட விரலுக்குத் தக்க வீக்கம் வேணும். நாங்கள் சாப்பாட்டுக்கே படாத பாடு படுறம். இந்த நிலையில, இவவுக்கு சில்லு வண்டில் வேணுமாம். ஊரில உள்ள மற்றப் பிள்ளையள் ஓடி விளையாடுறதைப் பார்த்திட்டு தனக்கொரு சில்லுவண்டில் வாங்கித் தரட்டாமையா... உங்கட கண் ஒப்பரேசனுக்கே நான் காசுக்கு எங்க போறதெண்டு தெரியாமல் அல்லாடுறன்" - பூமலர் விம்மினாள்.

"குழந்தை ஆசைப்படுறது சரி தானேயம்மா. மற்றக் குழந்தையள் ஓடியாடித் திரியிறதைக் கண்டால் அவளுக்கும் ஆசை இருக்காதே... சில்லு வண்டிலிலை எண்டாலும் அசைஞ்சு திரிஞ்சால் என்ன என்று நினைக்கிறது ஞாயம் தானே..."

ஒரு தீர்மானத்துக்கு வந்தவராய் கந்தையாக் கிழவன் தன் வேட்டியிலிருந்த முடிச்சை அவிழ்க்கத் தொடங்கினார்.

திடீரென்று அவரிடம் ஒரு தயக்கம் எழுந்தது.

'தவமணி ரீச்சர் என்ர கண் ஒப்பரேசனுக்காகத் தந்தது. அவள் என்னைப் பற்றி என்ன நினைப்பாள்... நான் பொய் சொல்லித் தான் காசு வாங்கிப் போட்டன் எண்டு நினைச்சால் எவ்வளவு கேவலம்...'

இந்த நினைப்பும் ஒரு கணம் தான். கிழவனுக்கு தன் மீதே வெறுப்பாக வந்தது.

'சே, என்ர சுகத்தைத் தான் இப்பவும் நினைச்சுப் பாக்கிறன். என்ரை பேத்தீன்ரை ஆசைக்கு முன்னாலை சாகிற வயசிலை எனக்குக் கண் பெரிசில்லை. தவமணி ரீச்சருக்கும் இது விளங்கும்...'

தன் மன ஓட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுக் காசைக் கையிலெடுத்தார்.

“இந்தா பிள்ளை... இது என்ரை கண் ஒப்பரேசனுக்காகத் தவமணி ரீச்சர் தந்தது... என்ரை பேத்தியின்ரை ஆசையை விட என்ரை கண் பெரிசே. அவளுக்கு சில்லு வண்டில் வாங்கிக் குடு...”

பூமலருக்கு முதலில் திகைப்பாக இருந்தது. தவமணி ரீச்சரை ஒரு கணம் நினைத்து பார்த்தாள். காசைக் கையில் வாங்கியபோது அவள் கண் கலங்கியது. பூமலரின் கண்களில் கண்ணீரைக் கண்டதும் அவள் தனக்காகக் கலங்குவதாக கந்தையாக் கிழவன் எண்ணிக் கொண்டார்.□□□

# யாரொடு நோகேன்

"டேய் நவம், என்னை ஏன்டா இவ்வளவு அவசரமா வரச் சொன்னாய்?" என்று கேட்டான் மூர்த்தி.

தலையில் இரு கைகளையும் வைத்திருந்த படி கண்களை இறுக மூடிக்கொண்டு சோபாவில் சாய்ந்திருந்தான் நவம் என்கின்ற நவரட்ணம்.

"மூர்த்தி நான் இண்டைக்கு ஸ்ரீலங்காவுக்கு போக வேணும். இப்பவே எனக்கு ஒரு 'ரிக்கற்' ஏற்பாடு பண்ணித்தா?" என்றவாறு நவம் மெதுவாகக் கண்களைத் திறந்தான். அவனுடைய கண்கள் சிவந்திருப்பதைக் கண்ட மூர்த்தி, நவம் அழுது இருக்க வேண்டும் என்பதையுணர்ந்து, அவனருகே சோபாவில் போய் அமர்ந்தான்.

"நவம், உனக்கு என்ன நடந்தது? ஏன் இப்படி கண் கலங்கி இருக்கிறாய்? ஏதும் பிரச்சினை என்றால் சொல்லு நான் உனக்காக இருக்கிறன், எல்லாத்தையும் தீர்த்து வைப்பன்" என மூர்த்தி நவத்திற்கு ஆறுதல் கூற முயன்றான்.

"நான் அதை எப்படிடா சொல்லுவேன்..." எனும் போதே நவம் வாய் விட்டு பெரிதாக அழுது விட்டான். மூர்த்திக்கு எதுவும் விளங்கவில்லை. அவன் நவத்தின் தோள் மீது தன் கைகளை வைத்து அவனை ஆசுவாசப்படுத்தினான்.

இரண்டு, மூன்று நிமிடங்களின் பின் நவத்தின் அழுகையின் வேகம் குறைந்தது. மீண்டும் அவனுக்குச் சொல்லத் தொடங்கினான்.

"மூர்த்தி உனக்குத் தெரியும் தானே, நான் அம்மா மேல எவ்வளவு உயிர் என்று... ஆனால் இப்ப அவ எங்கள் எல்லாரையும் விட்டுப் போய்ட்டாடா. அதை என்னால் தாங்க முடியலை... அவவின்ர கடைசிக் காலத்தில் அம்மாவுக்குப் பக்கத்திலே இருக்க வேணும் எண்டு நினைச்சன். ஆனால் அதுக்கு எனக்கு கொடுப்பனவு இல்லை... ஆனால் அவவின்ர கடைசிச் சடங்குகளில நான் கட்டாயம் இருக்க வேணுமடா. அம்மா முந்தி எனக்கு அடிக்கடி சொல்லுவா, 'எனக்கு நீ தான் கொள்ளி போட வேணும்' எண்டு. அதை நான் செய்ய வேணுமடா, நான் கொள்ளி வைக்காட்டில் அம்மாவின்ர ஆத்மா சாந்தி அடையாது" என்றவன் சில கணங்கள் அமைதியின் பின் மீண்டும் கூறினான்.

"நான் இண்டைக்கு ஸ்ரீலங்கா போறதுக்கு 'ரிக்கற்' இப்பவே வேணும். நீ ஏற்பாடு செய்" என்றான் திடமாக.

"நவம் உன்ர வேதனை எனக்கு விளங்குது. என்ர அம்மாவும் என்னை விட்டுப் போன போது நானும் இப்படித் தான் இருந்தன். உலகத்தில் உள்ள எதை இழந்தாலும் அந்த வேதனையை விட அம்மாவை இழக்கும் போது அனுபவிக்கின்ற வேதனையை சொல்லில் சொல்லேலாதுடா" என்றவன் தொடர்ந்து, "நீ இப்ப ஸ்ரீலங்காவுக்கு உடனேயே போகலாம் தான். அதிலை ஒரு பிரச்சினையும் இல்லை. ஆனால் நீ இவ்வளவு காலமும் ஆசைப்பட்டது கிடைக்கிற நேரத்திலை இப்படியொரு முடிவு எடுத்திருக்கிறாய். வடிவாய் யோசித்துப்பார்".

"இதிலை யோசிக்கிறதுக்கு என்ன இருக்குது மூர்த்தி. என்னைப் பெத்த அம்மாவை விட எனக்கு படிப்பு முக்கியமே?"

"டேய், அப்படிச் சொல்ல வரேலை. உன்னுடைய Phd படிப்பு முடியுறதுக்கு இன்னும் ஒரு 'பிரசென்ரேஷன்' மட்டும் தான் இருக்கு. அதுக்கு இன்னும் மூன்று நாள் இருக்குது. அம்மாவின்ர உடலை இன்னுமொரு மூன்று நாளைக்கு 'எம்பாம்' பண்ணி பத்திரப்படுத்தி வைக்கச் சொல்லி, 'கோல்' பண்ணிச் சொல்லன்டா"

"நீ சொன்ன மாதிரி, நான் முதலே அப்படிக் கதைச்சுப் பார்த்தன்டா. அம்மா கன காலம் படுக்கையில இருந்ததால இப்ப அவவின்ர உடம்பு ஆகலும் பழுதாய்ப் போச்சாம். அதை வீட்டில கன நாளைக்கு வைச்சிருக்க ஏலாதாமடா"

"நீ சொல்லுறதும் சரி தான்டா நவம். எதுக்கும் ஒருக்கால் உன்ரை 'சுப்பர்வைசருக்கு' அம்மாவின்ர மரணச் செய்தியைச் சொல்லிக் கதைச்சுப் பார்ப்பமே" என்றான் மூர்த்தி.

"நானும் அப்படி நினைச்சனான்டா. ஆனால் இண்டைக்குக் கனடாவின் தேசிய தினம். எல்லாரும் அதைக் கொண்டாடிக் கொண்டிருக்கினம். இப்ப ஒன்றும் செய்யேலாது" - நவம் யதார்த்தத்தை விளக்கினான்.

"இருந்தாலும் நாங்கள் ஒருக்கால் 'ட்ரை' பண்ணிப் பார்ப்பம். நீ உன்ர சாமான்கள் எல்லாத்தையும் 'பைக்' பண்ணி ரெடியாக நில்லுடா. நான் வெளியில போயிட்டு வாறன்" என்றபடி மூர்த்தி தன் காரை நோக்கி விரைந்தான். நவம், அவன் போவதை நம்பிக்கையுடன் பார்த்தான்.

நவமும் மூர்த்தியும் பால்ய சிநேகிதர்கள். இருவரும் ஒரே ஊரில் பக்கத்துப் பக்கத்து வீடு. முதலாம் ஆண்டிலிருந்து ஏ/எல் வரை ஒன்றாகவே படித்தவர்கள். இருவரது குடும்பமும் அந்தக் காலத்தில் பொருளாதார ரீதியாக வசதி வாய்ப்புக் குறைந்தவர்கள். படிக்கும் காலத்தில் படிப்பிற்குத் தேவையானவற்றை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வர். ஏ/எல்லிலும் இருவரும் பொறியியலாளராக வரும் நோக்குடன் கணிதத்துறையில் கற்றனர். ரியூஷனுக்குச் செல்வதற்குப் பண வசதி இல்லாததால் இருவரும், பாடசாலைப் படிப்பு முடிய வீட்டிலேயே சேர்ந்து பாடங்களை ஒருவருக்கொருவர் விளக்கிக் கற்றுக் கொண்டனர்.

பிறப்பிலிருந்து ஒன்றாகப் பழகியவர்களை உயர்தரப் பரீட்சையின் முடிவு பிரித்து வைத்து விட்டது. இருவருக்குமே பொறியியல் துறை கிடைக்கவில்லை. நவத்திற்குப் பௌதிக விஞ்ஞானம் கற்கும் வாய்ப்புக் கிட்டியது. ஆனால், மூர்த்திக்குப் பல்கலைக்கழக வாய்ப்பு எதுவுமே கிடைக்காமையால் விரக்தியடைந்த அவனை தகப்பன் கனடாவிற்கு அனுப்பி வைத்து விட்டார். இன்று மூர்த்தி நன்றாக உழைத்து மனைவி பிள்ளைகளுடன் சந்தோஷமாக வாழ்கின்றான்.

நவம் அவனது தாய் தந்தையருக்கு ஒரேயோர் ஆண் மகன். அவனுக்கு இரு தமக்கைமார் இருக்கின்றனர். நவத்தின் பல்கலைக்கழகப் படிப்புச் செலவுக்கு மூர்த்தியே அடிக்கடி பணம் அனுப்புவான்.

நவத்தைப் படிப்பில் வெற்றி பெறச் செய்வதில் அவன் தாய்க்கு அதிக பங்கு உண்டு. எப்படியாவது தன் மகனை உத்தியோகம் பார்க்க வைக்க வேணுமெண்டு ஆசைப்பட்டாள். அவன் படிக்கும் காலத்தில் அவனுக்குத் துணையாக பல இரவுகள் விழிப்புடன் இருந்திருக்கிறாள்.

நவம் தன் பட்டப் படிப்பை முடித்து இறுதிப் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்று பல்கலைக்கழகத்தில் தற்காலிக விரிவுரையாளராக நியமனம் பெற்றான். விரிவுரையாளராகத் தொழில் பார்த்துக் கொண்டிருந்த காலத்திலேயே கனேடியப் பல்கலைக்கழகம் ஒன்றுக்குக் கலாநிதிப் பட்டப் படிப்புக்கு விண்ணப்பித்தான். அவன் அதிர்ஷ்டத்தினால் வாய்ப்புக் கிடைத்தது. அந்த வாய்ப்புக் கிடைத்தது ஒரு சந்தோஷம் எனினும், மறுபக்கம் அங்கு சென்று படிப்பதற்கான செலவுகள் அவனுக்குக் கவலையைக் கொடுத்தது. மூர்த்தியிடம் உதவி கேட்கலாமா? என எண்ணியபோது, அவன் இவ்வளவு காலமும் பல உதவிகள் செய்தமையால் திரும்பவும் அவனிடம் உதவி கேட்பது நாகரிகமாகப் படவில்லை. நவம் கலாநிதிப் பட்டப் படிப்பு விடயத்தை அப்படியே விட்டுவிட்டான்.

திடீரென ஒரு நாள் மூர்த்தி, நவத்திற்கு 'கோல்' எடுத்து அவனைத் திட்டித் தீர்த்தான். முதலில் நவத்திற்கு எதுவுமே விளங்கவில்லை. பின்பு தான், அவனுக்கு எல்லாமே விளங்கியது. செலவிற்குப் பயந்து நவம் தன் படிப்பைத் தொடராமல் விட்டதுக்கு மூர்த்தி கவலைப்பட்டான். உயிர் நண்பன் என்பது வார்த்தையில் மட்டும் தானா, எனக் கேட்டுத் தனக்குத் தான் படிப்பின் அருமை

தெரியும் எனக் கூறிக் கிடைத்த வாய்ப்பை நழுவ விடாமல் உடனே கனடாவிற்கு வருவதற்கான ஏற்பாடுகளை எல்லாம் செய்யும்படி கட்டளையிட்டுவிட்டு மூர்த்தி ஃபோனை வைத்து விட்டான்.

இரண்டு வாரங்களின் பின் நவம் கனடா செல்வதற்கு வாய்ப்புக் கிடைத்தது. இருபத்திநான்கு மணி நேரப் பிரயாணம். அவ்வளவு நேரமும் நவம், மூர்த்தியுடன் தான் சேர்ந்து திரிந்த இளமைப்பருவ நினைவுகளை மீட்டு தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டிருந்தான்.

கனடாவில் நவம் படிப்பதற்கான அனைத்து வசதிகளையும் மூர்த்தி செய்து கொடுத்தான். கிழமையில் ஒவ்வொரு ஞாயிறும் இருவரும் ஒன்றாகவே கழித்தனர்.

நவம் தன் படிப்பிற்காக நான்கு வருடம் தாயைப் பிரிந்திருந்தான். அக்காலத்திலேயே அவனின் தாய் படுத்த படுக்கையாகி விட்டாள். அவள் படுத்த படுக்கையாக இருக்கும் செய்தியைக் கூட அவனின் சகோதரிகள் மறைத்து விட்டனர். நோய் முற்றிய நிலையில் கடைசிக் காலத்தில் மகனைக் காணமலேயே அவள் இறந்து விட்டாள்.

நவம் பயணத்திற்கு ஆயத்தமாக வெளியில் வந்து நின்றான். அப்போது மூர்த்தி வரவும் சரியாக இருந்தது. அவன் நவத்தை நேராக பல்கலைக்கழகத்திற்கு கூட்டிச் சென்றான். அன்று கனேடிய தேசிய தின விடுமுறை நாளாயினும், மூர்த்தி கடுமையான பல முயற்சிகளை எடுத்து, அந்தப் பல்கலைக்கழகத்திற்குரிய சில பேராசிரியர்களைச் சந்தித்து நவத்தின் நிலமையை விளக்கினான். நவத்தின் படிப்பிற்கான மேற்பார்வையாளர் பெண் என்பதால் செய்தி அறிந்து கண் கலங்கினாள். உடனடியாகவே யார்யாருடனோ தொடர்பு கொண்டாள். இறுதியில் அன்றைய தினமே நவத்தின் ஆய்வறிக்கைக்கான (பிரசன்ரேசனுக்கான) ஒழுங்குகளைச் செய்து இருந்தாள். தனது ஆய்வறிக்கையை நவம் நிறைவேற்றினான். இறுதியாக அப் பேராசிரியர்கள் நால்வருக்கும் நன்றி சொல்லி விட்டு இருவரும் புறப்பட்டார்கள்.

காருக்குள் இருவருக்குமிடையே நீண்ட அமைதியின் பின் மூர்த்தி கேட்டான்.

"நவம் பிரசென்ரேசன் எப்படியிருந்தது".

"பரவாயில்லையடா... நான் வடிவா ஆயத்தம் செய்யேல்லைத் தான். ஆனாலும் நான் சமாளிச்சிட்டேன். உனக்கு நான் எவ்வளவு நன்றி சொன்னாலும் அது நீ செய்கின்ற உதவிகளுக்கு ஈடாகாதடா". என்னும் போது அவன் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

"உனக்கு உதவி செய்யாமல் நான் வேறை யாருக்கடா உதவப் போறன்".

"எனக்காக நீ எவ்வளவு கஸ்ரப்படுகிறாய்... இவர்களை எப்படி நீ சம்மதிக்க வைத்தாய். எனக்கு அதிசயமாகக் கிடக்குடா. இண்டைக்கு கனேடிய தேசிய தினம். இது எங்கடை தாய் நாடு கூட இல்லை. அப்படியிருந்தும் அவர்கள் எனக்காக இண்டைக்கு 'யுனிவேர்சிற்றி' வந்து 'பிரசென்ரேசனை' நடத்தியிருக்கினம். எங்கடை ஸ்ரீலங்காவிலை கூட இப்படிச் செய்வினமோ தெரியேல்லை. ஆனால் இந்தக் கனேடியர்கள் எனக்கு பெரிய உதவியைச் செய்திருக்கினம். என்ரை வாழ்க்கையில் இதை நான் ஒரு நாளும் மறக்க மாட்டன்டா".

"ஓ.கேடா... நவம் 'எயர்போர்ட்' வந்திட்டுது. நீ ஸ்ரீலங்கா போய் நல்ல படியாக அம்மாவிற்குரிய சடங்குகளைச் செய்". என்ற படி காரை நிறுத்தி அவனுடைய 'பாக்'குகளை தூக்கிக் கொண்டு சென்றான். அவனுக்குரிய 'ரிக்கற்'றை நவத்தின் கையில் கொடுத்தான். நவம், மூர்த்தியை நன்றிப் பெருக்குடன் பார்த்து விட்டு அவனைக் கட்டி அணைத்து விட்டுச் சென்றான்.

இருபத்திநான்கு மணி நேரப் பயணத்தின் பின் நவம் கொழும்பிற்கு சென்று, அங்கிருந்து ஒரு மணித்தியால விமானப் பயணத்தில் யாழ்ப்பாணத்தை அடைந்தான். அங்கிருந்து ஒரு 'ஓட்டோ'வைப் பிடித்து தனது சொந்த இடமான அளவெட்டிக்குப் புறப்பட்டான்.

வீடு நெருங்க நெருங்க அவனுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. அவன் வீட்டு வாசலில் வந்திறங்கிய போது நவத்தின் சகோதரிகள், உறவினர்கள் எல்லோரும் வந்து கட்டி அணைத்து அழுகின்றனர். நவம்

முற்றத்தில் நின்றபடியே வீட்டின் உள்ளே நோக்கினான்.

அங்கு விறாந்தை வெறுமையாய் இருந்தது. அயலில் உள்ள சில பெண்கள் வீட்டினைக் கழுவிக் கொண்டிருந்தனர். வீட்டின் முன் புறத்தில் தென் மேற்கு மூலையில் வெள்ளை வேட்டி ஒன்று கட்டப்பட்ட இடத்தில் கட்டில் ஒன்று சரித்து வைக்கப்பட்டிருக்கிறது.

தேசிய தினத்தையும் பொருட்படுத்தாமல், பரீட்சகர் சபையைக் கூட்டி தன் 'பிரசென்ரேசனுக்கு' ஏற்பாடு செய்து கொடுத்து தன்னை உடனடியாகவே ஸ்ரீலங்காவுக்கு அனுப்பி வைத்த கனேடிய பல்கலைக்கழகத்தினர் அவன் கண் முன் தெரிந்தனர். அது வரை தன்னுள் அடக்கிக் கொண்டிருந்த அன்னையின் பிரிவுத் துயரை விட பெரிய சோகமொன்று தன்னைச் சூழ்ந்து கொள்வதை உணர்ந்தான். 'ஓ'வென்று பெருங் குரல் எடுத்து அழத் தொடங்கினான். □□□

# மனத்தாங்கல்கள்

அன்று மாலை ஆறு மணியளவில் மீரா மிகவும் பரபரப்புடன், நூலகத்திலி ருந்து வீட்டுக்கு வந்தாள். அவளுடைய முகம் அச்சத்தால் இருண்டிருந்தது. எதையோ மிக ஆவலுடன் எதிர் பார்ப்பது போலக் காணப்பட்டாள். இதுவரை காலமும் இவள் இவ்வாறு இருந்ததே இல்லை.

இதை அவதானித்த அவளது தாய் " மீரா... மீரா... ஏன் இண்டைக்கு இவ்வளவு 'ரென்சன்' ஆக இருக்கிறாய்? நூலகத்திற்கு போனனியோ... பேப்பர் பார்த்தனியே... ஏதும் புதினம் கிடக்குதோ?" என்றாள்.

அதற்கு மீரா "அம்மா இண்டைக்கு எங்கடை A/L 'ரிசல்ட் அவுட்' ஆகுதாம். எண்டு பேப்பரில் கிடக்குது. 'ரிசல்ட்' இப்ப 'அவுட்'டாயிடுத்தோ, இல்லையோ தெரியல. எனக்கு ஒரே ரென்சன் ஆகக் கிடக்கனை. என்ர 'செல்போனை' ஒருக்கால் கொண்டானை. 'மெசேஜ்' அனுப்பிப்பார்ப்பம்.

மீரா, மூன்றாம் ஆண்டு படிக்கும் போதே தகப்பன், வேலைக்கு போன இடத்தில் மரத்தால் தவறி விழுந்து, அந்த இடத்திலேயே மாண்டு போனார். மீராவுக்கு எல்லாமே அவள் தாய் தான். அவளின் தாய்மாமன் வெளி நாட்டிலை. அவர் தான் அவளுக்கு வேண்டிய பொருட்களை அனுப்புறவர். அவர் தான்

'செல்போனும்' அனுப்பினவர். மீராவின் தாய், சட்டை தைத்து வாற பணம் இருவரின் சாப்பாட்டுக்கு மட்டுமே போதுமாயிருந்தது. மீரா நிறத்தில் தகப்பனைப் போல கொஞ்சம் குறையத்தான். சின்ன வயசிலேயே படு சுட்டி. ஐந்தாம் தர 'ஸ்கொலசிப்'பில் நாலு 'மார்க்ஸால்' 'பெயில்' விட்டவள். ஆனால் தாய் கொடுத்த ஊக்கத்தால O/L லிலை ஆறு 'A'யும் நாலு 'B'யும் எடுத்தவள். A/L படிக்கும் போது நல்ல ஊக்கமாகத்தான் படிச்சவள்.

மீராவின் தாய் " இந்தா பிள்ளை 'செல்போன்' " என அவள் கையில் கொடுத்தாள்.

மிகவும் ஆவலாக 'செல்போனை' வாங்கிப் பார்த்தாள். அதில் 'கவரேஜ்' இல்லை. சினங்கொண்டவளாய், "இந்த யாழ்ப்பாணத்தில 'கறண்டும்', 'கவரேஜ்'சும் எப்ப வரும், எப்ப நிக்கும் எண்டு ஒருவருக்கும் தெரியாது. இந்தா பிடியணை இதைக் கொண்டு போய் அங்கே வை" என சலித்துக் கொண்டாள்.

"பிள்ளை, நீ ஏனடா பயப்பிடுறாய், நான் கும்பிடுற என்ர 'வயிரவன்' உன்னைக் கைவிடான். உனக்கு 'கம்பஸ்'சுக்கு போகக் கூடிய 'ரிசல்ட்' வந்தால் காணும்" என்று கூறியவாறு தலைக்கு மேல் கையைக் கூப்பி கிழக்கே பார்த்து, " என்ர 'வயிரவா', என்ர பிள்ளையைக் கைவிட்டுடாதே! என்ர தாலியைத்தான் இளசிலே அறுத்துப் போட்டாய், என்ர பிள்ளையாவது சந்தோசமாக இருக்க வேணும்"

மீராவால் நிம்மதியாக ஒரு இடத்தில் இருக்க முடியவில்லை. 'செல்போனில்' 'கவரேஜ்' வந்து விட்டதா என பார்ப்பதும் சினங்கொள்வதுமாகக் காணப்பட்டாள்.

இரவு எட்டு மணியிருக்கும். பக்கத்து வீட்டு மாலா அக்கா, "அடியே மீரா 'கவரேஜ்' வந்திட்டுது 'ரிசல்ட்' பார்த்திட்டியே" என்று கூவி அழைத்தாள்.

"இல்லையக்கா" எனக்கூறிக் கொண்டு ஓடிச் சென்று 'செல்போனை' எடுத்து தனது சுட்டெண்ணை 'செல்போனில்' பதிவு செய்து, 'மெசேஜ்' அனுப்புகின்றாள்.

ஒரு நிமிட இடைவெளிக்குப் பின் 'டிங் டிங்' என்ற ஓசையுடன், அவள் வாழ்க்கையை நிர்ணயிக்கப் போகும் 'ரிசல்ட்' வந்தது. 'செல்போனில்' திரையில்

மூன்று பாடங்களும் 'A' சித்தி எனக் காட்டுகின்றது.

உலகமே தன் கையிலடங்கியதைப் போல மீரா மகிழ்ச்சியின் உச்சக்கட்டத்திற்குச் சென்றாள். அவளால் நம்ப முடியவில்லை. ஆனந்தத்தில் தாயைக் கட்டிக் கொண்டு அழுகின்றாள். தாயும் தன் பிரச்சினையெல்லாம் தீர்ந்து விட்டதாக ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றாள்.

ஒரு கிழமையின் பின் பாடசாலைக்குத் தன் நண்பிகளுடன் 'கன்டோஸ்' கொடுக்கச் சென்றாள். பாடசாலைக்குள் நுழையும் போதே அவளுக்குள் ஒரு இனம் புரியாத மகிழ்ச்சி தோன்றியது.

'ரிசல்ட்' வந்து மூன்றாம் நாளே மீராவின் பேட்டி பத்திரிகையில் வெளியாகி யிருந்தது. அதுவும் அவளுக்கு பெரிய சந்தோஷத்தைக் கொடுத்தது.

முதலில் அதிபரின் அறைக்குள், அதிபருக்கு 'கன்டோஸ்' கொடுக்கச் செல்கின்றாள்.

"அட நீரே இங்க வாரும். உம்மைப் பற்றித்தான் இவ்வளவு நேரமும் கதைச்சுக் கொண்டிருந்தனாங்கள்" என அதிபர் கூற, அவள் உச்சி குளிர்ந்து போனாள்.

"உமக்கு என்ன தைரியம்... அப்படி ஒரு பேட்டி கொடுப்பீர்... '3A' எடுத்தவுடனே பெரிய ஜனாதிபதி என்று நினைப்போ... பவானி ரீச்சரும், ரஞ்சி ரீச்சரும் வரட்டும்..." என அதிபர் மனோகரி அவளைக் கடிந்து கொண்டார்.

மீராவின் முகம் இருண்டு கவலையுற்றது.

" 'கன்டோஸ்' கொடுப்பதெல்லாம் இருக்கட்டும். அதிலை போய் இரும். மற்ற ரீச்சர்மார் வந்து உம்மை விளங்கட்டும்"

மீரா வகுப்பில் மிகவும் கெட்டிக்காரி . அவளுக்குத்தான் எல்லா 'மார்க்ஸ்'சும் கூட வர வேணும். ஆனால் சங்கீதம், தமிழ், சமயம், சுகாதாரம் போன்ற பாடங்களில் கட்டுரைப்பகுதிகளில் 'மார்க்ஸ்"சைக் குறைத்து விடுவார்கள். ஏனெனில் அவள் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவள். இவளைக் கண்டாலே சில ரீச்சர்மாருக்கு எரிச்சல் வந்து விடும். "இவையள் எல்லாம் எங்கடை பள்ளிக்கூடத்துக்குப் படிக்க வந்திட்டினம்." என மீராவின்

காது படவே கூறியிருக்கிறார்கள்.

நல்லதைக் கற்பிக்க வேண்டிய ஆசிரியர்களே மாணவர்களை சாதி, பேதம் காட்டி வேறுபடுத்தியது, மீராவுக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுத்தது. பேச்சுத்திறன், கவிதையியற்றும் திறன் எனப் பல திறன்கள் நிறைந்தவள் மீரா. ஆனால் பாடசாலை நாட்களில் மீரா ஒரு போட்டிக்கும் அனுப்பப்பட்டதில்லை. உளவியல் ரீதியாக, மன ரீதியாக அவளுக்கு அநீதிகள் இழைக்கப்பட்டன.

மீராவின் பாடசாலையில் O/L இல் 5A இற்கு மேற்பட்டவர்களுக்குத் தான் மாணவர் தலைவர் பதவி கொடுக்கப்படும். மீராவிற்குப் பாடசாலையில் இரண்டாவது கூடிய 'ரிசல்ட்'. ஆனால் அவளுக்கு மாணவர் தலைவர் பதவி வழங்கப்படவில்லை. ஆனால் அவளிலும் பார்க்க 'ரிசல்ட்' குறைந்த பன்னிரெண்டு மாணவியருக்கு மாணவ தலைவர் பதவி வழங்கப்பட்டது. இதனால் மீரா மிகவும் நொந்தாள். பாடசாலைக்கு செல்ல மறுத்து வீட்டில் சண்டை போட்டு நின்றிருக்கிறாள். தாயின் புத்திமதியால் ஒருவித விரக்தியுடனும் கல்வியில் வெற்றி பெற்று அவர்கள் எல்லோருக்கும் சாட்டையடி கொடுக்க வேண்டுமென எண்ணித்தான் படித்திருந்தாள்.

இந்த மனத்தாங்கல்கள் எல்லாவற்றுக்கும் ஆறுதல் கொடுப்பதாக அவளது 'ரிசல்ட்' அமைந்தது. அதனால் அவளைப் பத்திரிகையொன்றில் பேட்டி கண்டு பிரசுரித்திருந்தனர்.

அந்தப் பேட்டியில்,

> " நான் வாழ்க்கையில் எவ்வளவோ கஸ்ரப்பட்டு இந்த நிலமையை அடைந்திருக்கின்றேன். நான் கற்ற பாடசாலையில் மாணவர்களை ஊக்குவிக்க வேண்டிய ஆசிரியர்களே சாதி - பேதம், ஏழை - பணக்காரர் எனப் பாகுபடுத்திப் பல மனத்தாக்கங்களை எனக்கு கொடுத்திருந்தனர். எனவே, நான் இப் பாடசாலையில் கற்றதால் பல இடையூறுகளை நான் அனுபவித்தேன். இதனால் இவர்களையெல்லாம் உளவியல் ரீதியாக ஆற்றுப்படுத்தத்தக்க வகையில் நான் 'கவுன்செலர்' ஆக வர விரும்புகின்றேன்......."

இவ்வாறு மீரா கூறியிருந்ததே பாடசாலையைச் சார்ந்தவர்களுக்கு எரிச்சலைக் கொடுத்தது.

அரைமணி நேரத்தின் பின்னர் அதிபர் அறையில் மீராவின் பேட்டிக் கருத்துக்கள் தொடர்பான விளக்கம் அதிபர், பவானி ரீச்சர், ரஞ்சி ரீச்சர் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. மீரா பயந்து வெருண்டு விம்மிக் கொண்டு, அவர்களின் கேள்விக்குப் பதில் அளிக்க முடியாதவாறு இருந்தாள்.

அந்நேரம் பார்த்து அதிபரைச் சந்திக்கவென பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் வருகின்றார். அவர் ஒரு 'கவுன்செலர்'.

அதிபரை நோக்கிப் பேராசிரியர் "என்ன ரீச்சர் பிரச்சினை?" என்று வினாவ, அதிபர் மீராவின் பேட்டி பற்றிக் கூறி, "இவளை என்ன செய்யலாம் 'சேர்' " எனக் கேட்டார்.

அதற்கு அவர் " அந்தப் பிள்ளையில் முற்றுமுழுதாக குற்றத்தை நாம் சுமத்தி விட முடியாது. இங்கு, ஏதோ பல மனத்தாங்கல்கள் ஏற்பட்ட காரணத்தால் தான் இவ்வாறு கூறியிருக்கின்றா போல இருக்குது. அவவை விசாரிப்பதை விட்டுவிட்டு, மேற் கொண்டு இவ்வாறான மனத்தாக்கங்கள் மாணவர் மத்தியில் ஏற்படாமல் கவனித்துக் கொள்ளுங்கோ" என்கிறார்.

" நீங்கள் சொல்லுறது சரிதான் 'சேர்' "

மீராவை நோக்கி "சரி நீர் போட்டு வாருமம்மா" என்கின்றார் அதிபர்.

மீரா பேராசிரியருக்கும் 'சொக்லெட்' கொடுத்து விட்டு அதிபர் அறையை விட்டு வெளியேறுகின்றாள். கூடவே பேராசிரியரும் சந்த வேலையை முடித்து விட்டு வெளியேறுகின்றார்.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த பவானி ரீச்சர் பொறுமையை இழந்து, ரஞ்சி ரீச்சரை நோக்கி "உவர் என்ன ஆக்கள்" என கேட்கின்றா...

ரஞ்சி ரீச்சர் ரகசியமாக நொடித்துக் கொண்டே கூறுகின்றாள்;

"உவரும் மீராவின்ரை ஆக்கள் தான்..." □□□

# மனதில் உறுதி வேண்டும்

மூன்று மாதங்களின் பின் அன்று தான் மகேஸ்வரி தன் மாமியார் வீட்டுக்குச் செல்கிறாள். இரண்டு மூன்று 'ஷொப்பிங்' பைகளில் பழ வகைகள், பிஸ்கட் வகைகள், சொக்லேட் வகைகள் என, தன் மச்சான் மச்சாள்மார்களிற்குப் பிடித்தவற்றை வாங்கி தன் மாமியாருக்குப் பிடித்த லட்டுக்களையும் நேற்றிரவு முழுக்கக் கண்விழித்துச் செய்து இன்று கொண்டு செல்ல ஆயத்தமாகிறாள். புறப்படும்போது, பிறவியிலேயே வாய்ப் பேச்சுத் துண்டிக்கப்பட்ட அவளது தகப்பன் கோயிலில் அர்ச்சனை செய்த விபூதியை அவள் நெற்றியில் பூசி விடுகிறார். தந்தையின் முகத்திலேயே தாயையும் கண்ட நிறைவோடு, அவரின் பாஷையிலேயே "போயிட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு, பக்கத்து வீட்டுப் புவனேஸ்வரி அன்ரியை அழைத்து "அன்ரி! அப்பாவையும் வீட்டையும் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கோ, நான் திரும்பி வர இரண்டு மூன்று நாட்களாகும்" என்றபடி செல்கிறாள்.

மகேஸ்வரியைப் பார்த்துப் புவனம் பெருமைப்பட்டுக் கொள்வாள். அவளின் முற்போக்குச் சிந்தனைகளையும் எந்தக் காரியத்தையும் துணிந்து செய்யும் ஆற்றலையும் கண்டு அவள் வியந்ததுண்டு.

மகேஸ்வரி வங்கியில் வேலை செய்யும்போதும் எந்தக் காரியத்தைச் செய்யவும் பின்நிற்கமாட்டாள். அவளின் அயரா உழைப்பிற்குப் பதவி உயர்வு கிடைத்தது. இது பலரின் கண்களை உறுத்தவே செய்தது. ஒருவரின் முன்னேற்றம் கண்டு இன்னொருவர் வயிறெரிவது வழக்கந் தானே. மகேஸ்வரியின் உயர்வைக் கண்டு பொறுக்காதவர்கள் பலவிதமான கதைக்ளை உருவாக்கத் தவறவில்லை. இதற்கெல்லாம் உடையாத அவள் மனம் தாய்ப் பாசத்தால் உடைந்து சுக்குநூறானது.

தாயும் தந்தையுமே குடும்பம் என்றிருந்த மகேஸ்வரிக்கு அவளது தாய், அவளுக்கென்று ஒரு குடும்பத்தை உருவாக்க முனைந்தாள். வெளிநாட்டு வரன் ஒன்று தேடி வரவே, தாயின் வற்புறுத்தலாலும் குடும்பச் சூழ்நிலையாலும் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்.

சம்பந்தக் கலப்பு இரு வாரங்களில் நிறைவேறியது. மகேஸ்வரி தன் மாமியார் வீட்டுக்குச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டாள். 'ஒருவர் வீட்டுக்கு செல்லும்போது வெறுங்கையுடன் செல்லக்கூடாது' என்ற தாயின் வாசகத்திற்கேற்ப, கைநிறையப் பொருட்களுடன் செல்வாள். அவர்கள் அவள் மேல் பாசத்தைப் பிழியும்போது மகேஸ்வரி உச்சி குளிர்ந்து போவாள். மகேஸ்வரிக்கும் பாபுவுக்குமிடையிலான தொடர்பு தொலைபேசியில் தொடர்ந்தது.

'காதல்' என்ற மாயமான உலகத்தினுள் எந்த ஓர் உயிரினமும் அகப்படாமல் இருக்கமுடியாது போலும். அது அவரவர் அறியாமலே அவர்கள் மனதிலே புகுந்துவிடும் என்பதை மகேஸ்வரியால் இப்போது தான் உணர முடிந்தது.

தினமும் பாபுவுடன் தொலைபேசியில் உரையாடும்போது தான், காதல் மிகவும் அற்புதமான விடயம் என்பதை அவள் உணர்ந்தாள். "மகேஸ்... மகேஸ்..." என அவன் செல்லமாக அழைக்கும்போது அவள் குழந்தையாகி விடுவாள்.

அவனோடு வாழப் போகும் நாட்களை எண்ணியெண்ணி அவள் பூவாய் மலர்வாள். நேரம் போவது தெரியாமலேயே மகேஸ்வரி, பாபுவுடன் ஏதேதோ எல்லாம் அவளையறியாமலேயே தொலைபேசியில் கதைத்துச் சிரிப்பாள். பிறகு தனிமையிலிருந்து அவற்றை மீட்டுப் பார்க்கும்போது தான்,

'இப்படியாக எல்லாம் கதைத்து விட்டோமே' என்று தன் தலையில் செல்லமாகத் தட்டிக் கொள்வாள்.

மகேஸ்வரியின் திருமண விடயம் பற்றிக் கூறவும் தன் அண்ணன்மார்களிடம் சீதனத்திற்காகப் பணம் திரட்டுவதற்காகவும் மகேஸின் தாய், தனது இளைய மகனுடன் வன்னிக்குச் சென்றாள். அவர்கள் அங்கு சென்ற இரு நாட்களின் பின் போர் ஆரம்பமானதால், வன்னியிலிருந்து அவர்கள் வெளியேற முடியாதபடி பாதை மூடப்பட்டது.

இனிமேல் என்ன நடக்குமென்றே தெரியாமல் மகேஸ்வரி திகைத்தாள். எப்படியாவது அவர்கள் சுகமாக வந்து சேர்ந்து விடுவார்கள் எனத் தன் மனதைத் தைரியமாக்கிக் கொண்டாள். எத்தனை நாட்கள் தான் அவள் இதே நம்பிக்கையில் நாட்களைக் கடத்தமுடியும். ஆறுதல் சொல்லக்கூட யாருமற்ற நிலையில் அவள் இருக்கிறாள். தந்தை இருந்தாலும் அவர் அவளுடைய உடைமைகளுக்கே பாதுகாப்பை அளிக்க முடியும். உடைந்து போகின்ற அவளின் மனதைத் தேற்ற முடியா வகையிலல்லவா விதி வினை செய்கிறது.

சீதனம் இல்லாததால் திருமணம் இடைநிறுத்தப்பட்டது. சீதனம் வாங்கச் சென்ற அவளது தாய் இன்னும் வரவில்லை. திருமணத்திற்கு அவள் கொழும்பு செல்ல வேண்டும். கையில் பணமில்லாமலும் அருகில் தாயில்லாமலும் அவள் எப்படித் திருமணம் செய்வாள்?

இரண்டு மாதங்கள் கடந்து விட்டன. இனி, எந்த நம்பிக்கையில் அவள் தன் மனதைத் தளராமல் வைத்திருப்பது? தாயையும் தம்பியையும் பற்றி எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை... அவர்களின் நினைப்பிலேயே அவள் மனம் சுழன்றது. 'அவர்களால் மூன்று வேளைச் சாப்பாடும் ஒழுங்காகச் சாப்பிட முடிந்ததோ... முடியாவிட்டாலும் ஒரு வேளையாவது... அம்மா இங்கிருந்து இரண்டு சாறி தானே கொண்டு போனவா, உடுக்கத் துணியின்றி என்ன பாடு படுகின்றாவோ... அம்மாவின் மருந்துகள் கூட அங்கே கிடைக்க வழியில்லை. எப்படித் தான் தலைவலியைத் தாங்கிக் கொள்கிறாவோ... தம்பி ஒரு வேளை கூடச் சாப்பிடாமல் இருக்க மாட்டான். இப்ப என்ன செய்யுறானோ... அவனின்ர படிப்பு வீணாய்ப் போச்சே... இரண்டு மாசமாகப் பள்ளிக்கூடம் போகலை, அவன்ர எதிர்காலம் வீணாய்ப் போச்சு... அம்மாவும் தம்பியும் ஒன்றாக,

யாராவது வீட்டில் பத்திரமாக இருக்கிறார்களோ... அல்லது அம்மா தனியாக... தம்பி தனியாக... சிதறி நடுத்தெருவில் நிற்கிறார்களோ, அல்லது அவை இப்ப உயிரோட இருக்கினமோ எண்டு கூடத் தெரியலியே...' போன்ற சிந்தனைகள் அவள் மனதுக்குள் ஓடத் தொடங்கின. அப்படியே வாய் வழியாக வந்து, வீட்டுக்கு வருகிறவர்கள், போகிறவர்கள், தெருவில் காண்பவர்கள் என எல்லோரிடமும் தன்னையறியாமலே புலம்பத் தொடங்கினாள். எதிலும் உறுதியாயிருக்கும் அவள் மனம் பாசத்தினால் சற்றுத் தளர்ச்சியடைந்தது. மகேஸ்வரி மனம் குழம்பித் தான் போனாள். அவளுக்கு தன்னையே யாரென்று தெரியாத நிலை.

மகேஸின் தந்தை, புவனத்தின் உதவியுடன் அவளைத் தெல்லிப்பளையில் சேர்த்தார். குணமாக இரண்டு மாதம் பிடித்தது. வீட்டிற்கு வந்த அடுத்த நாளே தன் மாமியார் வீட்டுக்குக் கிளம்பி விட்டாள்.

அடிக்கடி வந்து போன, மாமியார் வீட்டில் இன்று காலடி எடுத்துவைக்கும்போது அவள், ஏதோ புது இடத்திற்கு வருவது போல் உணர்ந்தாள். ஏனெனில், அங்கு அவர்கள் நடந்து கொண்ட விதம் அவளை அப்படி நினைக்கச் செய்தது.

கேற்றைத் திறக்கும்போதே, ஓடி வந்து "அண்ணீ!" எனக் கூப்பிட்டபடி ஆசையாக ஓடிவரும் பூரணி, இன்று தாயைக் கூப்பிட்டபடி, "அம்மா! ஆரோ வருகினம்" என்று சொல்லியபோது, "ஆரோ" என்று அவளைக் கூறியது, மகேஸின் மனதில் முள்ளாகக் குத்தியது. மகேஸின் தலையில் முத்தமிட்டபடியே வரவேற்கும் அவள் மாமியார் இன்று வாசலில் நின்றபடியே "ஏன் இங்கை வந்தனீ... உனக்கு என்ன வேணும்?" என முகத்தைத் திருப்பியபடியே கேட்டாள்.

மாமியின் குரலில் காணப்பட்ட அதட்டலைக் கண்ட மகேஸ்வரி ஒரு கணம் திகைத்தாள். பின், தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, "ஏன் மாமி, இப்பிடி எல்லாம் கதைக்கிறியள்... நான் என்ன பிழை செய்தனான்"

"இனிமேல், நீ என்னை மாமி எண்டு கூப்பிடாதை. நான் ஒரு பைத்தியக்காரிக்கு மாமியாக இருக்க விரும்பேலை"

"மாமி, என்னைப் பைத்தியம் எண்டு சொல்லாதிங்கோ, ஊர் சனம் என்னை அப்பிடிச் சொன்னாலும் நான் தாங்குவன், அதைப் பற்றிக் கவலைப்பட

மாட்டன். ஆனால், நீங்கள் என்னை அப்பிடிச் சொல்றதை என்னால தாங்கேலாது" என்று கூறும்போதே கண்களில் நீர் அரும்பியது.

தான் மனநோயாளி என்று பிறர் சொல்வதை யாரால் தான் தாங்க முடியும். தங்கள் தங்களுடைய மனதையே புரிந்து கொள்ள முடியாத வகையிலான சூழலில் வாழும் மக்கள் எப்படி பிறர் மனதைப் புரிந்துகொண்டு அதற்கேற்ற வகையில் நடக்கமுடியும்? ஒருவரின் குறைகளைச் சுட்டிக் காட்டுவதிலுள்ள அலாதி இன்பம் வேறெதில் கிடைக்கும்? இதில் மகேஸ்வரின் மாமியார் மட்டும் விதிவிலக்கா...

மகேஸ்வரி, தான் கொண்டு வந்த பொருட்களை மாமியாரின் கையில் கொடுக்க, "இனி, ஏன் இதெல்லாம்..." என்றபடி அதைத் தூக்கி வீசுகிறாள். இச்செயலைப் பார்த்து அதிர்ந்த மகேஸ்வரி, ஏன் அவள் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறாள், எனச் சிந்தித்தபடியே, "மாமி, ஏன் அதையெல்லாம் எறியிறியள், நீங்கள் இப்படிச் செய்யுறது பாபுவுக்குத் தெரிந்தால் அவர் உங்களோட இனிமேல் கதைக்க மாட்டார்"

ஒருவித நமட்டுச் சிரிப்புடன், "உனக்கு விசயம் தெரியாதே, நீ பைத்தியக்கார ஆஸ்பத்திரியில இருந்ததைக் கேள்விப்பட்ட உடனேயே என்ர மகன், 'நீ வேண்டாம்' எனச் சொல்லிட்டான். அவன் பைத்தியக்காரியோட குடும்பம் நடத்த விரும்பேலையாம். இனிமேல் உன்னோட உறவு கொண்டாட வேண்டாமெனச் சொன்னதும் பாபு தான்" என்று அவள் கூறி முடிக்கும் முன்பே, "இல்லை... அவர் அப்பிடிச் சொல்லியிருக்க மாட்டார். பாபுவுக்கு நானென்றால் உயிர். அவர் என்னைத் தவிர வேறொருவரையும் கலியாணம் செய்ய மாட்டார். எனக்கு அவர் மேல் நம்பிக்கை இருக்கு" என்று புலம்பினாள்.

"பாபு உன்னை வேண்டாமென்று சொன்னதுக்கு இன்னொரு காரணமும் இருக்கு... நீ ஆஸ்பத்திரியிலை இருக்கேக்க தான் இன்னொரு விசயம் அறிஞ்சனாங்கள்... உன்னோட பாங்கில வேலை செய்த குமரனுக்கும் உனக்கும் காதல் இருந்ததாமே, நீங்கள் இரண்டு பேரும் ஊரெல்லாம் சுத்தினீங்கள் என்று ஊரே கதைக்குது" என மகேஸின் மாமியார் கூறிய வார்த்தைகள் அவளுக்குத் துன்பத்தின் மேல் துன்பத்தைக் கொடுத்தன.

"வாயை மூடுங்கோ..." என்று கொந்தளித்த மகேஸ்வரி, பின், சற்றுத் தணிந்த குரலில் "என்ர அம்மாவும் தம்பியும் வன்னியல போய்ப் போருக்குள்

மாட்டுப்பட்டதால அவையைப் பற்றி ஒரு தகவலுமே கிடைக்காமல் நாங்கள் பட்ட பாடு உங்களுக்கு எங்க தெரியப் போகுது. அவையள் உயிரோட இருக்கினமோ எண்டு கூடத் தெரியாமல் நான் தவிச்சுப் போய் மனங் குழம்பிட்டன்... அம்மாவும் தம்பியும் ஷெல் பட்டுச் செத்துப் போட்டினம் எனப் பிழையான தகவல் கிடைச்சதால, நான் என்னையே மறந்து சித்த சுவாதீனமற்று இருந்திட்டன். தெல்லிப்பளையில இருந்த நான் இப்ப முழுசாச் சுகமாயிட்டன். இனிமேல் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லையென டொக்ரர் சொல்லிட்டார். அதோட அம்மாவும் தம்பியும் உயிரோட வவுனியா செட்டிக்குளம் முகாமில இருக்கினமாம். அம்மா கடிதம் போட்டிருக்கிறா... நான் ஆஸ்பத்திரியில இருந்து வந்ததும் உடனேயே ஆசையாகப் பார்க்க வந்தது உங்களைத் தான். ஆனால், நீங்கள் என்னைப் பற்றி என்னென்னமோ எல்லாம் கதைக்கிறியள்... இதையெல்லாம் என்னால ஜீரணிக்க முடியும். ஆனால், என்னை வேண்டாம் என்று சொல்லப் பாபுவுக்கு எப்படித் தான் மனம் வந்ததோ..." என, கண்களில் கண்ணீர் எட்டிப் பார்க்க விம்மினாள்.

"இஞ்ச பார் மகேஸ்வரி, உன்னை என்ர பிள்ளைக்குக் கட்டி வைச்சால் ஊர் பழிக்கும். அதோட இன்னொருக்கால் உனக்குப் பைத்தியம் பிடிச்சால் பாபு கஷ்டப்படுவான். அவன் வாழ்க்கையில சந்தோசமாக இருக்க வேணும். அது தான் எனக்கு முக்கியம். அதனால அவனுக்கு வேறோர் இடத்தில பொம்பிளை பார்த்திட்டன். எட்டு லட்சம் சீதனமாகத் தருவினமாம்" என்றதைக் கேட்டவுடன், இனிமேல் தான் அழுது எந்தவிதப் பயனுமில்லை என்பதையுணர்ந்த மகேஸ்வரி, 'நான் ஏன் இவர்கள் முன்னால் அழவேண்டும். வாழ்க்கை கலியாணத்துக்குள்ளா அடங்கியிருக்கிறது. இல்லையே... வாழ்க்கையின் சிறிய ஒரு பகுதி தான் கலியாண வாழ்க்கை. அது இல்லையென்றால் என்ன... உலகில் வேறு எத்தனையோ விடயங்கள் இருக்கின்றன' எனத் தன்னைத் தானே சமாதானம் செய்ய முயன்றாள்.

வீட்டுக்குச் சென்றவுடனேயே தன் அறைக் கதவைப் பூட்டிக் கொண்டாள். மிகவும் சத்தமாக வீரிட்டுக் கத்தவேண்டும் போலிருந்தது. 'பாபுவால் எப்பிடி என்னை மறக்க முடிஞ்சுது... அவர் ரெலிபோனில் என்னோட கதைத்த காதல் வார்த்தைகளெல்லாம் பொய்யா... நான் அவரை எவ்வளவு தூரம் நம்பியிருந்தன்... இப்பிடி என்னை ஏமாற்றி விட்டாரே...' என்று மனம் எண்ணியதால் தலையணை கண்ணீரால் நனைக்கப்பட்டது. அந்த ஓர் இரவு கழிவது அவளுக்குப் பெரும் சிரமமாயிருந்தது. பாபுவின் நினைவுகளை

வேரோடு பிடுங்கி எறிய முயன்றாள். முழுமையாக அவனின் நினைவுகளைத் தூக்கியெறிய முடியவில்லை. இருந்தாலும் முழுமையாகத் தூக்கி எறிய முடியும் என்ற மனத்தெம்பு அவ்ளுக்கு உண்டானது.

அதிகாலை விழிக்கும்போதே அவள் மனமும் விழித்துக்கொண்டது. இன்று அவள் வேலைக்குச் செல்லும்போது வங்கியிலும் ஊரிலும் காண்பவர்கள் எல்லோரும் அவளைக் கேட்பார்கள் 'உன்ர கலியாணம் நின்று போய் விட்டதாம்' என்று. அதற்கெல்லாம் அவள் பதில் சொல்ல வேண்டும். மகேஸ்வரியின் மனம் ஒரு பதிலை ஒப்புவித்து வைத்திருக்கின்றது.

"திருமணம் செய்து தான் ஒரு பெண் இந்த உலகத்தில வாழ வேண்டுமென்பதில்லை. ஆணின் அதிகாரத்தின் கீழ் தங்கியிருக்க வேண்டுமென்பதில்லை. பெண்கள் திருமணம் என்ற பந்தத்துக்குள் அடைபட்டுத் தன் சுதந்திரம், ஆசாபாசங்கள் என எல்லாவற்றையும் தொலைத்துத் தன் கணவனுக்காகவே வாழ நேரிடுகிறது. கணவனின் விருப்பத்திற்கமையவே அவள் தன்னை வளைந்து கொடுக்க நேரிடுகிறது. திருமணம் தான் ஒரு பெண்ணிற்கு உலகமல்ல. அதை விட எத்தனையோ விடயங்கள் இந்த உலகிலுண்டு. திருமணம் செய்து உலகின் ஏதோவொரு மூலையில் கணவன் பிள்ளைகளுடன் வாழ்ந்து வெளியுலகம் தெரியாமலே கண்ணை மூடி விடுகிறோம். இப்படிக் கிணற்றுத் தவளையாக இருக்காமல் அன்னை தெரேசா போல நாமும் இந்த உலகில் சமூக சேவை செய்து ஏழைகளின் வாழ்க்கைக்கு ஒளி கொடுக்கலாம்..." போன்ற சிந்தனைகள் அவளுள் வட்டமிட அவள் வங்கியை நோக்கி நடக்கிறாள். □□□

# நெஞ்சு பொறுக்குதில்லையே !

"அம்மா, நான் எடுத்த முடிவில இனி எந்த விதமான மாற்றமும் கிடையாது. நீங்கள் என்ன சொன்னாலும் சரி, நான் என்ர முடிவை மாற்ற மாட்டன்"

"ஏன் தம்பி பிடிவாதம் பிடிக்கிறாய். நான் உன்ர நன்மைக்குத் தானே சொல்றன். நீ உன்ர வாழ்க்கையில் கஸ்ரப்படாமல் சந்தோசமாக இருக்க வேணும் என்பது தான் என்ர விருப்பம். அது ஏன் உனக்கு விளங்காதாம்"

ஒரு மணித்தியாலமாக சிவகுமாருக்கும் அவனது தாய் ராசாத்திக்குமிடையில் இப்படியாக போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இருவருக்குமிடையில் பேச்சு வார்த்தை நீண்டு கொண்டிருக்கிறதே தவிர, எந்தவொரு முடிவுக்கும் அவர்கள் வந்ததாக தெரியவில்லை.

சிவகுமார் ஜனசக்தி காப்புறுதிக் கூட்டுஸ்தாபனத்தில் எழுதுவினைஞராக பணிபுரிகின்றான். வேலைக்கு செல்லும்போது தான் அவன் நித்தியாவைச் சந்தித்தான். அவளைக் கண்ட முதல் நாளே தன்னை அவளிடம் பறிகொடுத்து விட்டான். அவளைத் தினமும் பார்க்காமல் அவனால் இருக்க முடியவில்லை. காதல் என்ற கடலில் மூழ்கினான்.

சிவகுமாரின் நாளாந்த செய்கைகளை பார்த்து, அவன் தன்னைத் தான் பார்க்கிறான் என்று நித்தியாவுக்கு விளங்கியிருந்தும், அவள் அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல், தன் 'எ.ஏல்' படிப்பின் மீதே கவனத்தை செலுத்தினாள். ஆனால் காதலின் சக்தி அவளையும் விட்டு வைக்கவில்லை. அவளும் சிவகுமாரை விரும்பினாள்.

நித்தியாவிடம் தன் காதலை சொல்வதற்குரிய தக்க தருணத்தை எதிர்பார்த்து சிவகுமார் காத்திருந்தான். இருந்தாலும் சிவகுமாரால் தன்னை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியவில்லை. புதன் கிழமைகளில் மூன்றரை மணிக்கு நித்தியாவுக்கு வகுப்பு என்பதை அறிந்திருந்தான். அவள் வரும் பாதையில் காத்து நின்றான். அவன் அதிர்ஷ்டமோ என்னமோ சொல்லி வைத்தாற் போல் அன்று நித்தியா, தன் நண்பிகள் இன்றி தனியாக வந்து கொண்டிருந்தாள். நித்தியாவை தூரத்தே கண்டவுடனேயே, சிவகுமாரின் உள்ளத்தில் இனம்புரியாத மகிழ்ச்சியும் உற்சாகமும் உண்டானது. அவள் அருகில் வந்ததும் தன் சைக்கிளை, அவளின் சைக்கிளுக்கு குறுக்காக நிற்பாட்டினான்.

பிரேக்கை அழுத்தி சைக்கிளிலிருந்து நித்தியா இறங்கி நாணத்துடன் தலையைக் கவிழ்த்துக் கொண்டு நின்றாள். சிவகுமார் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, றோட்டில் யாரும் வரவில்லை என்பதை உறுதி செய்தான். அவளின் கண் பார்வையிலிருந்து வழிந்தொழுகும் தேனைப் பருகிக் கொண்டு, "இந்தப் பார்வை என் வாழ்நாள் முழுக்க கிடைக்குமா?" என்று சட்டென கேட்டு விடுகிறான்.

அவள், உடனே தான் பதில் சொல்வது அநாகரிகமானது என்பதையுணர்ந்து, தன் விழிகளை அவன் விழிகளோடு ஒன்றிக்கச் செய்துவிட்டு வேகமாக சைக்கிளை உழக்கினாள். சிவகுமார் எதுவும் புரியாமல் நடு றோட்டில் திக்கற்றவன் போல் நின்றான். இனி அவளை வெள்ளிக்கிழமை தான் அவன் சந்திப்பான். 'அவள் என்ன பதில் கூறப் போகின்றாளோ?' என்ற குழப்பத்துடனேயே அவன் சென்றான்.

வெள்ளிக்கிழமையன்று அவள் தன்னைக் கண்டும் காணாதது போல் செல்வதையும், முகம் வாடிக் கிடப்பதையும் கண்ட சிவகுமாருக்கு ஏதோவோ போலிருந்தது. அவளின் பின்னால் மெதுவாக சென்றான். அவள் ஒரு

குச்சொழுங்கையினுள் சைக்கிளை செலுத்தினாள். அங்கு சன நடமாட்டம் குறைவு என்பதையுணர்ந்த சிவகுமார் அவளைத் தடுத்தான். அவள் நிலத்தை பார்த்தபடி நின்றாள். அவள் தலையை தன் விரல்களால் நிமிர்த்தியபோது, நித்தியாவின் விழிகளில் சொரிந்த கண்ணீரைக் கண்டதும் ஒரு கணம் திடுக்குற்றுப் போனான்.

"ஏன் அழுகிறாய்... உனக்கு என்னைப் பிடிக்கவில்லையோ?" என்று கேட்டான்.

"உங்களை எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஆனால், எங்கட காதல் நிறைவேறாது" என்றாள் நித்தியா.

"ஏன் நித்தி, அப்படி சொல்றாய். உனக்கு என்னைப் பிடிக்கும். எனக்கும் உன்னைப் பிடிக்கும். பிறகு ஏன் எங்கட காதல் நிறைவேறாது?"

"இல்லை, நிறைவேறாது. நேற்றுத் தான் உங்களைப் பற்றியொரு விசயத்தை என்ர 'ப்ரண்ட' சொன்னவள். நீங்கள் வேற சாதியாம். நான் இவ்வளவு நாளும் நீங்களும் எங்கட சாதியெண்டு நினைச்சுத் தான் உங்களை விரும்பினனான். ஆனால் நீங்கள் வேற சாதியெண்டு தெரிஞ்சவுடனேயே நான் பதறிப் போட்டன். நாங்கள் தாழ்த்தப்பட்ட சாதி. எங்கட சமூகத்தார் உங்கட வீடுகளுக்கு வாறதை, உங்கட சமூக ஆக்கள் விரும்ப மாட்டினம். பிறகு எப்படி, எங்கட காதல் நிறைவேறும்? உங்கட மனசை நான் குழப்பியிருந்தால் என்னை மன்னியுங்கோ..." என்றபடி கண்களில் வடிந்த நீரைத் துடைத்தாள்.

"அட... இது தான் உன்ர பிரச்சினையே? நவீனமயப்பட்ட இந்த உலகத்தில நீ சாதி பற்றிக் கவலைப்படுறாய். 'எ.ஏல்' படிக்கிற நீ சாதி பற்றிக் கதைக்கிறது முட்டாள் தனமாக கிடக்கு. நாங்கள் எல்லாரும் மனுசர் தானே. உன்ர உடம்பிலயும் என்ர உடம்பிலயும் சிவப்பு ரத்தந் தானே ஓடுது. பிறகென்ன எங்களுக்குள்ள சாதி பேதங்கள்? நீயும் நானும் கலியாணம் செய்து குடும்பம் நடத்துறதுக்கு சாதி முக்கியமில்லை. உன்ர நல்ல குணமும் என் மேல் நீ வைத்திருக்கும் அன்பும் போதும். நித்தி, உன்ர குடும்ப நிலை எனக்கு தெரியும். நான் உன்னிடம் சீதனம் எதையுமே எதிர்பார்க்கலை. நீ கிடைத்தால் எனக்கு அதுவே பெரிய சீதனந் தான். நீ படிக்கிறதை நான் குழப்ப மாட்டன். நீ படிச்சு

கம்பசுக்கு போக வேணுமென்பது தான் என்ர ஆசை – நான் உன்னை சந்தோசமாக வைத்திருப்பன்" என்று கூறியபடி நீண்ட பெருமூச்சொன்றை வெளிவிட்டபடி அவளது பதிலை எதிர்பார்த்தான்.

"அது சரிப்பட்டு வராது சிவா. நீங்கள் ஒருவர் மட்டும் இப்படி நினைத்தால் மட்டும் சாதி ஒழிந்து போகாது. இப்ப ஊருக்குள்ள வெளிப்படையா சாதி இல்லைத் தான். ஆனால் அவையளின்ரை உள்ளங்களில ஒளிஞ்சு இருக்குது. இதுக்கு மருந்து கண்டுபிடிப்பது கஸ்ரம். ஏனெனில் சாதி, மனிசரை விழுங்கும் நோய். நீங்கள் என்னை மன்னியுங்கோ... என்னை விட நல்ல பெண்ணாய் உங்கட சாதிக்குள்ளேயே பார்த்து கலியாணம் செய்யுங்கோ"

"இல்லை நித்தியா. நீ இல்லாவிட்டால் எனக்கு வாழ்வேயில்லை" என்றவாறு தன் வலது கையில் நெருப்பினால் 'நித்தி' என பொறிக்கப்பட்ட தீக் காயத்தை காட்டினான். அதைக் கண்டதும் அதிர்ந்தவளாய் "என்ன சிவா, இப்படி செய்திட்டியா" என்றபடி அவனுடைய தீக் காயத்தின் மீது முத்தமிட்டாள்.

அதன் பின்பு அவர்கள் காதல் இனிதே கனிந்தது.

'தன் வீட்டில் எப்படியாவது தங்கள் திருமணத்திற்கு சம்மதம் வாங்குவேன்' என்று நித்தியாவுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற அவன் தன் தாயுடன் வார்த்தையால் போராடிக் கொண்டிருக்கிறான்.

'இனி என்ன சொன்னாலும் தன் மகன் கேட்க மாட்டான்' என்று ராசாத்தி உறுதி செய்து அரை மனதுடன் சம்மதத்தை தெரிவிக்கிறாள்.

ராசாத்தியின் மகள் ரூபி ஓ.எல் பரீட்சை கூட சித்தியடையவில்லை. ஆனால் தனக்கு வரப்போகும் மருமகள் ஏ.எல் வரை படிக்கிறாள் என்பதையறிந்து, நித்தியா இன்னும் படித்தால் படிக்காத தன் மகளையும் தன்னையும் மதிக்க மாட்டாள் என்ற உள்நோக்கத்துடன், "சிவா, என்ர வருங்கால மருமகள் சுகமாக இருக்கிறாளா?" என குசலம் விசாரித்தாள்.

"ம்... இருக்கிறாள். நித்திக்கு சோதினைக்கு இன்னும் எட்டு மாசந் தானே இருக்கு. அதனால இப்ப எந்த நேரமும் புத்தகமும் கையுமாகவே இருக்கிறாள்"

"நல்ல கெட்டிக்கார பெட்டை போல... அவள் இன்னும் படிச்சு உத்தியோகம் செய்யுறது தான் எனக்கு விருப்பம். ஆனால் விதி தான் விளையாடுது"

"என்னம்மா சொல்லுறியள். எனக்கு ஒண்டுமே விளங்கேல்லை"

"சிவா, இண்டைக்கு காலமை உன்ர சாதகத்தை கந்தப்பு சாத்திரியிட்ட காட்டினனான். உன்ர கலியாண பலனை பற்றி விசாரிச்சன் - உனக்கு இந்த நாலு மாசத்துக்குள்ள கலியாணம் நடக்க வேணுமாம். அப்படி நடக்காட்டில் இனி ஏழு வருசத்தால தான் உனக்கு கலியாணப் பலனாம்... அது தான் என்ன செய்யுறதெண்டு தெரியேலை. யோசிக்கிறன்"

"நித்தியாவுக்கு சோதினை முடியட்டும். பிறகு கலியாணத்தைப் பற்றி யோசிப்பம்"

"என்ன, தம்பி இப்படி சொல்றாய். ஏழு வருசம் நான் இருப்பனோ தெரியாது. இருக்கிற காலத்தில உன்ர கலியாணத்தை பார்க்க எனக்கு ஆசை யில்லையே. பேரப் பிள்ளைகளையும் கண்டுட்டு செத்தாத் தான் எனக்கு நிம்மதியாக இருக்கும். கொப்பா போனாப் பிறகு உன்னை எவ்வளவு கஸ்ரப்பட்டு ஆளாக்கியிருக்கிறன்..." என்று கூறியபடி முதலைக் கண்ணீர் வடித்தாள்.

சிவகுமாரும் பெற்ற தாயை கண்கலங்க விடக் கூடாது என்ற சிந்தனையுடன் ஒத்துக் கொண்டான்.

ஒரு நல்ல நாளில் கோயிலில் திருமணம் ஆர்ப்பாட்டமின்றி நடந்தது. கஸ்டப்பட்ட குடும்பமாயினும் இரண்டு லட்சம் ரூபா காசுடனும், பதினைந்து பவுண் நகையுடனுமே நித்தியாவை மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

நித்தியா தன் கணவனின் மனதுக்கேற்றபடி இயைந்து நடந்தாள். அவனும் அவளுக்கு எந்தக் குறையுமில்லாமல் அந்நியோன்னியமாக நடந்தான். நித்தியா தாயானாள்.

நித்தியாவின் உறவினர்கள் தம் வீட்டிற்கு வருவதை ராசாத்தி விரும்பவில்லை. அவளைக் கொண்டே தாயும் மகளும் வேலை வாங்கினர்.

இத்திருமணத்தின் பிறகு ஊரிலுள்ளோர் தன்னை ஒதுக்குவதை ராசாத்தி உணர்ந்து கொண்டாள். இதற்குக் காரணமான நித்தியாவை காணும் போதெல்லாம் ராசாத்திக்கு ஆத்திரம் கிளம்பும். இருந்தாலும், தானும் மகளும் சாப்பாட்டுக்கு சிவகுமாரையே நம்பியிருப்பதால் அனைத்தையும் பொறுத்துக் கொண்டாள்.

ராசாத்தியை மட்டும் ஊர் சனம் ஒதுக்கவில்லை. அவளின் மகளையும் அவளது நண்பிகள் ஒதுக்கி விட்டனர். ஒரு நாள் ரூபி தன் தாயிடம் இது பற்றிக் கூறினாள்.

"அம்மா, என்ர 'ப்ரெண்ட்' ரதி எங்கட வீட்டுப் பக்கம் வாறதில்லை. அண்ணி வந்தாப் பிறகு ரதி என்னோட கதைக்கிறதில்லை. என்ர உயிர் நண்பி விஜிதாவுக்கு ஞாயிற்றுக்கிழமை கலியாணமாம். அவளும் என்னை தன்ர கலியாணத்துக்கு வா என்று கேட்கேலை. எல்லாம் இந்த அண்ணியால தான் வந்தது. அண்டைக்கு சுமதி வீட்டை போனனான். அவளின்ர அம்மா சொல்லுறா 'இனி சுமதியோட கூடித் திரிய வேண்டாமாம். அவளை எங்கடை வீட்டையும் கூட்டிக் கொண்டு போக வேண்டாமாம். ஏனெண்டால் அண்ணியின்ர ஆக்கள் அவளையும் தங்கட சாதிக்குள்ள கட்டி வைச்சுடுவினமாம்' என்று" சுமதியின் தாய் கூறியதை ரூபி கூறினாள். அத்தோடு "அம்மா, இதெல்லாம் பரவாயில்லை. என்னால வேற ஒரு விசயத்தைத் தான் தாங்க முடியலை" என்று கூறிவிட்டு அழத் தொடங்கினாள்.

பெற்ற மனம் பதறிப் போய் "ஏன் பிள்ளை அழுறாய்? அழாமல் விசயத்தை சொல்லு" என்றபடி அவளது தலையை தடவினாள் ராசாத்தி.

"அம்மா, நான் கோகுலனை விரும்புறது உங்களுக்குத் தெரியுந் தானே. அவரும் என்னை விரும்பினவர். ஆனால் இப்ப அவர் என்னைக் கலியாணம் செய்ய மாட்டனென்று சொல்லுறார். அண்ணன் கீழ்ச் சாதியிலை கலியாணம் செய்ததால, நாங்களும் இனி அந்தச் சாதி ஆக்களாம். இதனால கோகுலன்ர அப்பா அம்மா என்னை ஏற்க மாட்டினமாம்..." என்றபடி தாயின் மடியில் முகம் புதைத்து அழுதாள்.

"எல்லாம் உவனால வந்தது. அப்பவே நான் சொன்னனான், அந்த எளியவள் வேண்டாமெண்டு. கேட்டானே பாவி... உவனால இப்ப என்ர பிள்ளை அழுது கொண்டு நிற்குது" என மகனை ராசாத்தி திட்டினாள்.

மகளின் கண்ணீரை துடைத்தபடி “அழாதேயடா, கோகுலன் இல்லையெண்டால் என்ன? உனக்கு நான் நல்ல மாப்பிள்ளையாக பார்த்து கட்டி வைக்கிறன். உன்னக் கட்ட அவனுக்கு அதிஸ்ரமில்லை” என்று தேற்ற முயன்றாள்.

ஆனால் ரூபி மிகச் சத்தமாக புலம்பியபடி “இல்லையம்மா, நான் தான் அதிஸ்ரம் கெட்டவள். கோகுலனை கலியாணம் செய்யாட்டி எனக்கு வாழ்க்கையே இல்லை. என்னை வேறொருவரும் கலியாணம் செய்ய முன்வர மாட்டினம்”

“ஏன் பிள்ளை அப்பிடி கதைக்கிறாய்... உனக்கு என்ன பிரச்சினை சொல்லு” என தாய் பதற்றப்பட்டாள்.

“அம்மா, என்னை மன்னியுங்கோ. நான் பிழை செய்திட்டன்... கோகுலனிட்ட நான் என்னையே இழந்திட்டன்” என்றாள் ரூபி.

ராசாத்திக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வெள்ளம் தலைக்கு மேல் போய் விட்டதை உணர்ந்தாள். அவளின் மனம் ஏதோ கணக்குப் பார்த்தது. 'மகனுக்கு மறுவாழ்வு கிடைக்கும். ஆனால் மகளுக்கு இந்த வாழ்க்கை இல்லை என்றால்...'

“ரூபி, நீ கவலைப்படாதை. உனக்கும் கோகுலனுக்கும் கலியாணம் நடக்கும்” என்று தாய் உறுதியளிக்க ரூபியும் தன் கண்ணீரைத் துடைக்கிறாள்.

நித்தியாவுக்கு குழந்தை பிறந்து ஐந்து நாட்கள். ராசாத்தி நல்லதொரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருக்கிறாள். அன்று வீட்டில் ஒருவருமில்லை — ராசாத்தி, நித்தியாவுக்கு பத்தியச் சாப்பாடு செய்கிறாள். மல்லி, சீரகம், பூடு எல்லாம் சேர்த்து அம்மியில் அரைக்கிறாள். இவற்றுடன் அலரிக் காயும். மதியம் நித்தியா பத்தியச் சாப்பாடு சாப்பிடுகிறாள். அப்படியே சாய்ந்து விழுகின்றாள்.

இவ்வுலகில் பிறந்து ஐந்து நாட்களுக்குள் தன் தாயைப் பறி கொடுத்த பிஞ்சு மனம் அழுகிறது.

நித்தியாவின் தாய் வீட்டுக்கு அவளின் சடலமும் குழந்தையும் அனுப்பப்படுகின்றன.

ராசாத்தி வீட்டில் குசலம் விசாரிக்க கோகுலனின் அப்பா அம்மா வந்திருக்கின்றனர்.

சிவகுமார் வானத்தை வெறித்துப் பார்த்த படியே அமர்ந்திருக்கின்றான்.□□□

# மாறும் மானுடங்கள்

"என்ன தம்பி இன்னமும் யோசித்துக் கொண்டிருக்கிறாய்? இப்ப நீ என்ன முடிவு எடுக்கிறதாய் உத்தேசம்." இவ்வாறு கூறிய தாயின் குரலைக் கேட்டு திடுக்குற்று தன் சுய நினைவிற்கு வந்தான் சுரேஸ்.

சுரேஸ் ஒரு குடும்ப சுமையை தாங்கும் சுமைதாங்கி. அவனது சிறு வயதிலேயே தந்தை இறந்து விட்டார். தன்னுடைய தாயையும் இரண்டு தங்கைமாரையும் பாதுகாக்கும் பொறுப்பு அவனுடையது ஆயிற்று. இவன் படிப்பு எட்டாம் ஆண்டுடன் நின்றுவிட அவன் தனக்கேற்ற தொழிலாக சைக்கிள் திருத்தும் வேலையை தேர்ந்தெடுத்தான்.

பிறந்ததிலிருந்து எவ்வித சுகத்தையும் அனுபவித்திராத அவனுக்கும் அவனது குடும்பத்தினருக்கும் நல்லதொரு அதிர்ஷ்டம் வீடு தேடி வந்தது. 'அதிர்ஷ்டம் ஒரு முறை தான் கதவை தட்டும்' என்று சொல்வார்கள். இந்த அதிர்ஷ்டத்தை ஏற்பதா? விடுவதா என்பது தான் அவனது மனச்சஞ்சலம்.

***

நேற்றிரவு கல்யாணத் தரகர் சுரேஸின் வீட்டிற்கு வந்திருந்தார்.

"என்ன அண்ணை, இந்தப் பக்கம் வந்திருக்கிறியள்" என சுரேஸின் தாய் இராசம்மா கேட்டாள்.

"நல்ல விஷயமாத் தான் வந்திருக்கிறன். உன்ர குடும்பத்திற்கு நல்ல காலம் பிறந்திட்டுது. நீ பட்ட கஸ்ரங்களுக்கெல்லாம் விடிவு கிடைக்கப் போகுது..."

"என்னண்ணை புதிர் போடுறியள். நீங்கள் சொல்லுற ஒண்டுமே விளங்கேல்ல, விவரமா சொல்லுங்கோ"

"எல்லாம் உன்ர பொடியன்ர விஷயம் தான்"

அதற்கிடையில் "மாமா, ஒரு வாய் தேத்தண்ணி குடியுங்கோவன்" என இராசம்மாவின் மூத்த மகள் வசந்தி குறுக்கிடுகிறாள்.

"அட, எங்கட வசந்தியே... இவ்வளவு பெரிசா வளந்திட்டாய்" என்றவாறு அவளை மேலும் கீழுமாக உற்றுப் பார்க்கிறார்.

"பொறு பிள்ளை, ஒரு இனிப்பான விஷயத்தை சொல்லிப் போட்டு தேத்தண்ணியை குடிக்கிறன்"

"அண்ணே, கெதியா விஷயத்தை சொல்லுங்கோ" என இராசம்மா மீண்டும் அவரை துரிதப்படுத்தினாள்.

அவ்வீட்டிலுள்ளோரின் முகத்தை ஒருமுறை பார்த்துவிட்டு தரகர் தான் வந்த விஷயத்தை கூறத் தொடங்கினார். "இராசம், நீ உன்ர புருஷனை இழந்ததில இருந்து, இந்த மூண்டையும் வளக்க பட்ட கஸ்ரத்தை பாத்தவன் நான். உன்ர குடும்பத்தையும் ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வர நான் எவ்வளவோ முயற்சி செய்தனான். இப்ப தான் எல்லாமே கை கூடியிருக்கு" எனக் கூறி, சில கணங்கள் அமைதியாகி மீண்டும் கூறத் தொடங்குகிறார்.

"சுரேசுக்கு நல்ல ஒரு இடத்தில சம்பந்தம் வந்திருக்கு. நல்ல பணக்காரர். பெட்டையின்ர மூண்டு சகோதரங்கள் லண்டனில நிற்கிறான்கள். நல்ல காணி பூமி உள்ள ஆக்கள். நல்ல சீதனம் தருவினம்..."எனக் கூறியபடி அவர்களது முகத்தை பார்க்கிறார்.

எல்லோருடைய முகத்திலும் சிறு புன்னகை அரும்பியிருந்தது.

"அப்ப நல்ல இடமெண்டால் நீங்கள் பேசி முடியுங்கோவன். தம்பியின்ர சாதகம் உங்களிட்ட தானே இருக்குது. பொருத்தத்தையும் பாத்து சொல்லுங்கோவன்"

"அதெல்லாம் நான் முதலே பாத்திட்டன். எல்லா பொருத்தமும் நல்லா அமைஞ்சிருக்குது"

"அப்ப ஏன் யோசிக்கிறியள் அண்ணே! ஆக வேண்டியதை பாருங்கோவன்"

"இல்ல இராசம்... அதில சின்னொரு பிரச்சினை..."

"என்னண்ணை இழுக்கிறியள். என்ன பிரச்சினை எண்டு சொல்லுங்கோ"

"இந்தா பிள்ளை, எல்லாரும் பொம்பிளையின்ர படத்தை ஒருக்கா பாருங்கோ" என்றபடி போட்டோவை கையில் எடுக்கிறார்.

இராசம்மாவின் இரண்டாவது மகளான தீபா ஓடிச் சென்று படத்தை வாங்கிப் பார்க்கிறாள். சட்டென அவளது முகத்தில் ஏற்படும் மாறுதலைக் கண்டு வசந்தி அவள் கையிலிருந்த படத்தை வாங்கிப் பார்த்துவிட்டு தாயிடம் கொடுக்கிறாள்.

முன்னர் இருந்த குதூகலம் எங்கோ ஓடி மறைய எல்லோரும் என்ன கதைப்பதென்று தெரியாமல் விழித்தனர்.

"என்ன? எல்லாரும் அமைதியாயிட்டியள்"

"இல்லை அண்ணை, என்ர மோனுக்கு நான் கெடுதல் செய்ய மாட்டன்"

இராசம்மா இப்படி சொல்லக் காரணம் அந்தப் படத்தில் இருந்த உருவத்தின் தோற்றம் தான். 'ஆறடி உயரமுள்ள சுரேஸிற்கு மூன்றடி உயரமுள்ள பெண்ணா? செக்கச் செவேலென்ற சுரேஸிற்கு கருமையானவளோ? என பல எண்ணங்களை இராசம்மா மனதுக்குள் அசை போட்டுப் பார்த்தாள்.

சுரேஸ், என்ன தான் கஸ்ரத்தில வளர்ந்திருந்தாலும் அவனுக்கென்று ஆசாபாசங்கள் இருக்கும் தானே. ஆனால் அந்தப் பெண், சாதாரண பெண்ணின் உயரம் கூட இல்லை. கை, கால்கள் சூம்பியிருந்தன. அவளை இவனால் மணக்க முடியுமா?

தரகர் தொடர்கிறார். "இஞ்ச பார் இராசம், பெட்டையின்ர தோற்றத்தை பார்த்து யோசியாதையுங்கோ, உன்ர இரண்டு பெட்டையையும் நல்ல இடத்தில கரை சேர்க்க வேணும். இதைவிட உன்ர குடும்பம் முன்னேற வேற வழியில்லை. சுரேஸ் வர கதைச்சு எனக்கு நல்ல முடிவாய் சொல்லு. அப்ப நான் வாறன் பிள்ளை" என்றபடி தரகர் செல்கிறார்.

***

மாலை ஆறரை மணியிருக்கும். அந்த அந்தி வேளையில் தான் சுரேஸ் வேலை முடித்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தான். தன் வழமையான கடமைகளை முடித்தபின் சாப்பிட அமர்ந்தான். அவனருகே மூன்று பெண்களும் அமர்ந்தனர்.

அவர்கள் முகத்தில் என்றுமில்லாதவாறு ஒருவித பிரகாசம்.

"அம்மா! இண்டைக்கு எண்பது ரூபாத் தான் கிடைச்சது. இதை வச்சு நாளைக்கு வேண்டிய செலவை சமாளியுங்கோ"

"சரி தம்பி"

அம்மூன்று பெண்களும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து எதையோ சொல்லத் துடிப்பதை உணர்ந்தவனாய் "என்ன எல்லாரும் ஒரு மாதிரி இருக்கிறியள்"

"ஒண்டுமில்லையண்ணா" என வசந்தி சமாளிக்க முயன்றாள்.

தாயின் முகத்தை சுரேஸ் அவதானிக்கிறான், 'ஒருவித சந்தோசம் அவள் முகத்தில் தெரிவதுடன், எதையோ சொல்ல தவிப்பதும் முகத்தில் தெரிகிறது'

"என்னம்மா, என்னட்டை ஏதோ சொல்ல நினைக்கிறியள் போல கிடக்குது, என்னெண்டாலும் பயப்படாமல் சொல்லுங்கோ"

"தம்பி, இண்டைக்கு கல்யாணத் தரகர் வீட்டை வந்தவர்"

"தரகர் மாமா, தங்கைச்சிகளுக்கு சம்பந்தம் பேச வந்தவரோ?"

"இல்லையப்பா, உனக்குத் தான் ஒரு சம்பந்தம் பேசி வந்தவர். உனக்கும் அந்தப் பிள்ளைக்கும் நல்ல பொருத்தம், மூண்டு தமையன்மார் வெளிநாட்டிலையாம், சீதனம் எல்லாம் அள்ளித் தருவினமாம். எங்கட குடும்பம் இருக்கிற நிலையை பார்க்கேக்க இந்த சம்பந்தத்தை முடிக்கலாம் போல கிடக்கு. எங்களுக்கு பிடிச்சிருக்கு. நீ தான் உன்ர முடிவை சொல்ல வேணும்"

"அம்மா, உங்களுக்கு விருப்பம் எண்டால் எனக்கும் சம்மதம் தானே"

"அதெல்லாம் சரியடா தம்பி, நீ அந்த பிள்ளையின்ர போட்டோவை ஒருக்கால் பார்க்க வேணுமடா"

"ஏனம்மா, நீங்கள் பார்த்தால் சரி தானே"

"இதில்லைத் தம்பி, பெட்டைக்கு உன்னை விட ஐஞ்சு வயசு கூட" என்றபடி அந்தப் படத்தை அவன் கையில் கொடுத்துவிட்டு அம்மூன்று பெண்களும் எழுந்து சென்றனர்.

அன்றிரவு முழுக்க சுரேஸால் தூங்க முடியவில்லை. புரண்டு புரண்டு படுத்தபடி ஒரு முடிவுக்கு வந்தவனாய் தூங்கி விட்டான்.

விடிந்ததும் தாயிடம் சென்று "அம்மா, எனக்கு என்ர வாழ்க்கையை விட தங்கைமாரின்ர வாழ்க்கை தான் முக்கியம். பிறந்ததிலிருந்து அவளுகள் படுற கஸ்ரங்களை இவ்வளவு நாளா நான் பார்த்து சகித்தது போதும். நான் உழைக்கிற உழைப்பு இரண்டு வேளைச் சாப்பாட்டுக்கே போதாதாம். இந்த நிலையில எங்க நான் அவயளை கட்டிக் கொடுக்கிறது. இப்ப நான் செய்யப் போற இந்தக் கலியாணம் தான் எல்லா பிரச்சினைக்கும் முடிவா அமையப் போகுது. நீங்கள் மேற்கொண்டு ஆக வேண்டியதை கவனியுங்கோ"

இவ்வாறு சுரேஸ் கூறியதை கேட்டு மூன்று பெண்களும் மகிழ்ச்சியடைந்தனர்.

இரண்டு மாதங்களின் பின்னர் சுரேஸின் திருமணம் நல்ல முறையில் நடந்தேறியது.

சில நாட்களின் பின்...

அன்றொரு நாள் காலையில் வசந்தி மிகவும் பரபரப்புடன் காணப்பட்டாள். "அம்மா, தீபாவை காணேலையம்மா, வீடு முழுக்க தேடிப் பார்த்திட்டன்"

"என்னடி சொல்றாய், வடிவாய்ப் பார். பவானியம்மா வீட்டுப் பக்கம் போயிருப்பாள் பாரடி"

"அங்கை எல்லாம் விசாரிச்சுப் போட்டுத் தான் வாறன்" எனக் கூறும்போது அவளுடைய கண் முன்னாலிருந்த மேசையில் கடிதமொன்று சிறகடித்தது. அதிர்ச்சி அடைந்தவளாய் அதை எடுத்துப் படித்தவள், மெதுவாகக் கூறினாள் :

"அம்மா ! அக்கா தனக்குப் பிடிச்சவரோடை போய்ச் சேர்ந்து வாழப் போறாவாம்..."

தாயின் நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது. பெருங்குரலெடுத்து அழுது கொண்டே பொருமி வெடித்தாள் :

"உங்களுக்கு விருப்பமானவங்களோடை ஓடிப் போறதெண்டால் முன்னமே சொல்லாதேங்கோவனடீ... ஏனடி என்ரை ஆம்பிளைப் பிள்ளையின்ரை வாழ்க்கையைக் காவு கொடுத்தனீங்கள்..."

வசந்தி ஒன்றும் சொல்ல முடியாமல் திகைத்துப் போய் நின்றாள்.□□□

# மிடிமையில் அழிந்திடேல்

பல்கலைக்கழகத்திலிருந்து வீட்டுக்கு வரும்போது எப்போதும் சந்தோசத்துடன் துள்ளிக்குதித்து வரும் பிரதீபா, இன்று தளர்ந்த நடையுடன் சோர்ந்து, முகமெல்லாம் வாடிப்போய் வந்திருப்பதை கண்ட தாய் அன்னலட்சுமி, பதற்றமடைந்தவளாய் மகளருகே சென்று அமர்ந்து கொண்டாள்.

"பிரதீபா ஏனம்மா ஒரு மாதிரியாய் இருக்கிறாய். முகமெல்லாம் வாடிப்போய்க் கிடக்கு. யாழ்ப்பாணத்தில் நீ, ரூமில நீண்டநாள ஒழுங்காய்ச் சாப்பிடேல போலகிடக்கு. நீ போய் உடுப்பை மாத்திக் குளிச்சிட்டு வா நான் உனக்கு புட்டு அவிச்சுத்தாறன்", என்று அவளுடைய தலையைத் தடவிக் கொடுத்தபடி கூறினாள்.

தாய் கூறுபவற்றை காதில் விழாதளவுக்கு பிரதீபா ஏதோ யோசனை யிலிருந்தாள்.

வேலணையில் ஒரு சிறு குடிலில் குடியிருக்கும் பிரதீபாவின் தந்தை முடிவெட்டுந் தொழில் செய்தே, தன் நான்கு பிள்ளைகளின் வயிற்றை நிரப்பி வருகிறார். தினமும் வேலணையிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு செல்வது சிரமம் என்பதால், யாழ்ப்பாணத்தில் 'ரூம்' எடுத்து ஒரு மாதமாக அங்கு வசித்து வருகிறாள். திங்கள்கிழமைகளில் வீட்டிலிருந்து சென்று வெள்ளிக்கிழமை

பின்னேரங்களில் இங்கு வந்து விடுவாள். பிரதீபா யாழ்ப்பாணத்தில் நல்ல சாப்பாடு சாப்பிட்டிருக்க மாட்டாள் என்ற நினைப்புடன், சனி, ஞாயிறுகளில் தன் மகளுக்கு சமைத்து ஊட்டி விடுவாள் அன்னலட்சுமி.

அன்னலட்சுமி, பிரதீபா குளித்துவிட்டு வந்திருப்பாள் என நினைத்து அவளுக்கு தேநீர் கலக்கிக் கொண்டு வந்திருந்தாள். பிரதீபா ஒரு நாளும் இப்படி இருப்பதில்லை. தன் சகோதரர்களுடன் சேர்ந்து தானும் சின்னப் பிள்ளை போல அவர்களுடன் ஓடியாடி விளையாடுவாள். இன்று பிரதீபாவின் தம்பி, தங்கைமார் அவளை எத்தனையோதரம் அழைத்தும் அவள் பேசாமலிருந்தாள்.

"இவள் ஏன் இன்று இப்படியிருக்கிறாள்" என்ற யோசனையுடன் அன்ன லட்சுமி, அவளருகே சென்று உட்கார்ந்தாள்.

"பிள்ளை, கம்பஸில ஏதும் பிரச்சினையே என்னெண்டாலும் என்னட்ட சொல்லு நான் பார்த்துக் கொள்கிறன்."

பிரதீபா பல்கலைக்கழகம் சென்ற ஆரம்பத்தில், அங்கு 'சீனியர்மார்' செய்த பகிடிவதையினை தாங்க முடியாமல் எத்தனையோ தரம் அவள், தாயிடம் சொல்லி அழுதிருக்கிறாள். அப்போதெல்லாம், அன்னலட்சுமி தன் குடும்ப சூழ்நிலையை எடுத்துச் சொல்லி, இப்படியான சில துன்பங்களை சகித்துக் கொள்ளத்தான் வேண்டும் என பிரதீபாவை ஆறுதல்ப்படுத்தி மீண்டும் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைப்பாள். இன்றும் அப்படி ஏதும் பிரச்சினையால் தான் பிரதீபா கவலையடைந்திருக்கிறாள் என்று அன்னலட்சுமி எண்ணினாள்.

"அம்மா, நான் கம்பசுக்கு போகவேணும் எண்டு ஆசைப்பட்டன். அதற்காக எவ்வளவோ கஸ்ரத்தையும் பட்டுட்டன். ஏ.ஏல் படிக்கும் போது எல்லோரும் ரீயூசனுக்கு போய்த்தான் படிக்கிறவை. ஆனால் நான் வீட்டில வசதி இல்லாததால் ரீயூசனுக்கு போகாமல் பள்ளிக்கூடப்படிப்பை மட்டும் நம்பித்தான் படிச்சு கம்பசுக்குப்போனனான். நீயும் அப்பாவும் என்னைப் படிப்பிச்சு கம்பசுக்கு அனுப்ப எவ்வளவோ கஸ்ரப்பட்டுட்டீங்கள். ஆனால் இந்தக் கஸ்ரமெல்லாம் கொஞ்சக்காலத்துக்கு தான் என்று நினைச்சனம்மா. ஆனால் இந்த வறுமை எங்களை விடாது. எங்க போனாலும் துரத்திக் கொண்டு தான் வரும் போலக்கிடக்கு" என்றாள் விரக்தியடைந்தவளாய்.

"பிள்ளை இப்ப ஏன் அதைப்பற்றியெல்லாம் கதைக்கிறாய். நாங்கள் அப்ப பட்ட கஸ்ரங்களுக்கு விடிவாய்த்தான் நீ கம்பசுக்குப் போனாய். இன்னும் நாலு வருசத்தால நீ உழைச்சு எங்களைக் காப்பாத்துவாய் தானே. அதற்குப்பிறகு எங்களுக்கு என்ன கஸ்ரம் வரப்போகுது. இன்னும் இரண்டு, மூன்று மாதாத்தால உனக்கு மகாப்பொல புலமைப்பரிசில் காசு கிடைக்கும் தானே. அது உன்ர படிப்புச் செலவுக்கு போதும் நீயும் நல்லா படிக்கிறபிள்ளை. பிறகு என்னம்மா எங்களுக்கு கஸ்ரம்"

"நீ சொல்றது சரிதானம்மா. போன கிழமை தான் என்ர ரூம் காசு எழுநூற்றைம்பது ரூபா கட்டுறதுக்கு உன்னட்ட கிடந்த ஒரே ஒரு மின்னியான தோட்டை வித்துக் காசு தந்தவர், அப்பா. உன்ரை தோட்டை வித்தது எனக்கு கவலையம்மா. அந்தக்கவலை மாறுவதற்கு முன் இப்படியொரு நிலை எனக்கு வந்திட்டுது."

பிரதீபா கூறுவதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த அன்னலட்சுமிக்கு அவள் என்னத்தைப் பற்றி சொல்லுறாள் என விளங்கவேயில்லை எதுவுமே விளங்காத வளாய் பிரதீபாவின் முகத்தை அன்னலட்சுமி பார்த்தாள்.

"அம்மா நான் உந்தக் கம்பசுக்கு போகாமல் விட்டிருக்கலாம் போல இருக்கம்மா. ஏதாவது ஒரு வேலைக்கு போயிருக்கலாம். கம்பசுல அவங்கள், சீனியர் எண்டாப் போல ராக்கிங் எண்ட பெயரில செய்யுற சேஷ்டையல தாங்க ஏலாமக்கிடக்கு தங்களுக்கு பொம்பிளைச் சகோதரங்கள் இல்லாத மாதிரி எங்களிட்ட கேக்கிற கேள்வியல வாயல சொல்ல ஏலாது. உங்க இப்படியெல்லாம் செய்துட்டு பிறகு, பாடசாலை வழிய படிப்பிக்க போகேக்க. பிள்ளைகளுக்கு எப்படி நல்ல பழக்கவழக்கங்களை சொல்லிக் கொடுக்கப்போகுதுகளோ, தெரியேல்ல." என்று ராங்கிங் செய்யும் சீனியர்மார்களை திட்டதாத குறையாக சொல்லி முடித்தாள்.

"கம்பஸ் எண்டால் அங்க 'ராக்கிங்' இருக்கும். பிறகும் உன்னை யாரும் பகிடி செய்திட்டினமே அதே நீ ஒரு மாதிரி இருக்கிறாய்"

"அதில்லையம்மா அப்பிடிச் செய்திருந்தால் கூடப் பரவாயில்லை அடுத்த நிமிஷமே அந்த மிருகங்கள் பகிடி என்ற பேரில் செய்யும் சேட்டைகளை

மறந்திடுவன். ஆனால், அங்க 'சாறி' வாரம் என ஏதோ இருக்காம். அப்படியென்றால் ஒரு கிழமை முழுக்க 'சாறி' உடுக்க வேணுமாம். அப்பிடி அடுத்த கிழமை வரட்டாம், நான் எங்கேயம்மா சாறிக்குப் போவன்.

"பிரதீபா என்னட்ட இருக்கிற இரண்டு சாறியை மாறி மாறி கட்டிக் கொண்டு போவன் பிள்ளை. இப்ப உடனேயே எங்களான சாறிவாங்க முடியுமே! நீ பெரியபிள்ளை ஆன போது கூட சாறி வாங்க வழியில்லை. என்ரை பழைய சாறியைக் கட்டித்தானே நானும் கொப்பாவும் உன்னை பெரிய பொம்பிளையாய் பார்த்து சந்தோசப்பட்டம்" என்றவாறு முகத்தில் வழியும் கண்ணீரை துடைத்துக் கொள்கிறாள்.

"என்னோட படிக்கிற மற்றப் பிள்ளையள் எல்லாரும் இண்டைக்கு வீடுகளுக்குப்போய் தாய்மாரைக் கூட்டிக் கொண்டு போய் ஐஞ்சு நாளைக்கு ஒருசாறி என ஐஞ்சு சாறி வாங்கப் போயினமாம். பணக்கார வீட்டுப்பிள்ளையளுக்கு 'சாறி' வாரம் ஒரு திருவிழா மாதிரி. ஆனால் என்ன மாதிரி வறுமையில் வளர்ற பிள்ளையள் என்ன செய்வினம். நான் அப்படியெல்லாம் ஒரு நாளும் ஆசைப்படுறதில்லையம்மா. உன்னட்ட இருக்கிற இரண்டு சாறியையும் மாறி மாறிக் கட்டிக்கொண்டு போவம் என்று தான் நான் நினைச்சன். ஆனால் அப்படிப் போனாலும் அங்க பகிடி பண்ணுவினமம்மா"

"கவலைப்படாத பிள்ளை, என்ன செய்யுறது எங்கட தலைவிதி அப்படியாப்போச்சு அடுத்த கிழமை மட்டும் நீ போகாமல் நிண்டிட்டு பிறகு கம்பசுக்கு போ பிள்ளை."

"அப்படி நிற்கலாம் என்றால் நான் நிண்டுடுவன். ஆனால் அப்படிச்செய்தால், பிறகு இரண்டுகிழமை சாறியோட வரவேணுமெண்டு சீனியர்மார் சொன்னவை. கட்டாயம் போகத்தான் வேணுமம்மா. உன்னட்ட இருக்கு இரண்டு சாறியில, ஒரு சாறிசாயம் மங்கின மாதிரியிருக்கும்மா அந்தச் சாறியின்ர தொங்கல் சைக்கிள் சில்லுக்குள் மாட்டி கிழிஞ்சதெல்லே, அந்தக்கிழியலும் பெரிதாகத் தெரியும். அதை எப்படிக் கட்டிக் கொண்டு போறது. உன்னுடைய மற்றச்சாறியைக் கட்டிக்கொண்டு போகலாம். ஆனால் அதுக்கு நல்ல ஒரு மேற்சட்டை தைக்கவேனும் அதுக்கு ஒரு நானூறு ரூபா வேணுமே"

பிரதீபாவின் கேள்விக்கு தான் சொல்வதற்கு தன்னிடம் ஒரு பதிலுமில்லையே என்ற வேதனையுடன் அன்னலட்சுமி தரையைப் பார்த்தபடி

அமர்ந்திருந்தாள். இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு வேண்டுமே என்ற நோக்கில் பிரதீபாவே மீண்டும் தொடர்ந்தாள்.

"ஊரில் இருக்கிற சொந்தக்காரர் எல்லாரிட்டையும் வாங்கிய கடனுகளை இன்னும் கொடுக்கேல்லை. இனிமேல் அவயளிடம் போய் நிற்க்கேலாது" என்று கூறியவள். திடீரென, "அம்மா நான் கம்பசுக்கு போகாமல் எங்கேயாவது ஒரு வேலைக்கு போகலாம் என்று நினைக்கிறன்"

என்ன பிரதீபா கதைக்கிறாய். இது ஒரு சின்ன விசயம். இதுக்குப்போய் படிப்பை விடப்போறனெண்டு சொல்றாய். இதுக்கே இவ்வளவு நாளும் கஸ்ரப்பட்டனி... ராசாத்தி ரீச்சர் இருக்கிறாவெல்லே அவ நிறைய சாறி வைச்சிருப்பா. உனக்காக இரண்டு சாறி கேக்கட்டே"

"இவ்வளவு நாளும் மற்றவையட்ட உடுக்கத் துணி தான் கேட்காமலிருந்தம். ஆனால் அந்தக் கடவுள் அதையும் கேட்க வைச்சிட்டானே. இனி என்னம்மா செய்யுறது. வேறு வழியில்லை." என்றவாறு மறுபக்கமாக தலையைத் திருப்பி வைத்துக் கொண்டு கண்களில் வடியும் நீரைத் துடைக்கிறாள்.

அன்னலட்சுமி, ராசாத்தி ரீச்சரின் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறாள். □□□

# மறுவாழ்வு

"குட் மோர்னிங் ரீச்சர்"

வசந்தி ரீச்சர் வகுப்பறையினுள் நுழையும்போது மாணவர்களின் குரல் ஒருமித்து ஒலிக்கிறது. உயர்தர வகுப்பிற்கு இரசாயனவியல் கற்பிக்கும் வசந்தி ரீச்சர், மாணவர்களின் வரவைப் பதிய வரவுப் பதிவேட்டை எடுத்து வகுப்பிலுள்ள ஒவ்வொருவரினதும் பெயரைக் கூப்பிடுகின்றார்.

"ஜனனி"

"இருக்கிறன் ரீச்சர்"

"அனுசியா"

"ஓம் ரீச்சர்"

"யாழினி, ஆரணி, துர்க்கா... நிருபா"

"நிருபா... நிருபா"

"ரீச்சர், அவ இனிமேல் பள்ளிக்கூடம் வரமாட்டா" என நிருபாவின் நண்பி வளர்மதி கூறினாள்.

"ஏன் வரமாட்டா?"

"அவளுக்கு கலியாணமாம். இன்னுமொரு கிழமையால வெளிநாட்டுக்குப் போகப் போறாள்" நிருபா பாடசாலைக்கு வராமைக்கான காரணத்தை வளர்மதி கூறினாள்.

அந்த வகுப்பில் கல்வி கற்கும் நிருபா கடந்த ஐந்து நாட்கள் பள்ளிக்கூடத்திற்கு வராதது, வசந்தி ரீச்சருக்கு வியப்பைத் தந்தது. ஒவ்வொரு தவணைப் பரீட்சையிலும் வகுப்பில் முதலிடத்தைப் பெறுபவள் நிருபா. பாடசாலைக்கு ஒழுங்காக செல்வதில் அவளை யாருமே மிஞ்சி விட முடியாது. காய்ச்சல், தலையிடி என்றால் கூட வீட்டில் நிற்க மாட்டாள். ஒரு நாள் பாடசாலை போகாமல் நின்றால் கூட, நிருபாவால், அடுத்த நாள் படிப்பிற்கும் பாடத்தை விளங்கிக்கொள்ள முடியாமல் போய்விடும். மற்றைய பிள்ளைகளைப் போல், நான்கைந்து ரியூசனுக்குப் போய் பணம் செலவழித்து படிக்கும் அளவுக்கு நிருபாவின் குடும்பம் குபேர குடும்பமல்ல.

வளர்மதி கூறிய பதிலைக் கேட்டு வசந்தி ரீச்சர் உட்பட மாணவர்கள் அனைவரும் அவளை ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

"என்ன சொல்றீர் வளர்மதி? நிருபாவிற்கு கலியாணமோ? 'ஏ.எல் ரெஸ்ற்'றக்கு இன்னும் நாலு மாசந் தானே கிடக்குது. இப்ப கலியாணம் கிலியாணமெண்டு அந்தப் பிள்ளையின்ர வாழ்க்கையை கெடுக்கப் போகுதுகள். இவ்வளவு காலமும் படிப்பிச்சவை, இன்னும் நாலு மாசம் பொறுக்க மாட்டினமாமே... இந்த முறை எங்கட பள்ளிக்கூடத்தில இருந்து 'என்ஜினியரிங் பக்கல்ரி'க்கு இந்தப் பிள்ளை போகுமெண்டு மற்ற ரீச்சர்மாரும் அதிபரும் எதிர்பார்க்கினம். நிருபாவிற்கு நல்ல எதிர்காலம் இங்க இருக்க, வெளிநாட்டுக்கு அனுப்பி நாசப்படுத்தப் போயினம்..." என்று நீண்ட பெருமூச்சொன்றை வெளிவிட்டபடி, பிள்ளைகளுக்கு படிப்பிக்க, புத்தகமொன்றை கையில் எடுக்கிறாள்.

***

நிருபாவை பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டார் இன்று வர இருக்கிறார்கள். நிருபாவின் நான்கு சகோதரிகளும் ஆளுக்கொரு வேலையில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். நிருபாவிற்கு இரண்டு

தமக்கைகள் இருந்த போதிலும், அவர்களை விட அழகுடைய நிருபாவையே அவர்கள் பெண் கேட்டு வந்தனர்.

நிருபாவிற்கு இந்தத் திருமணத்தில் சம்மதம் இருக்கவில்லை. எத்தனையோ தடவை இந்தக் கலியாணம் வேண்டாம் என தாயுடன் போராடிக் களைத்து விட்டாள்.

"அம்மா, அக்காவையள் இருக்கும்போது எனக்கு எதுக்கு கலியாணம். மூத்தக்காவுக்கு முப்பத்தியொரு வயதாகுது. அவவுக்கு முதல் கலியாணத்தை முடியுங்கோ. நான் இப்ப படிக்கிறன் தானே. என்ர படிப்பு முடிய கலியாணத்தைப் பற்றி யோசிப்பம்" அக்காமாரை சாட்டியாவது தன் திருமண முயற்சியை நிறுத்த நிருபா முயன்றாள்.

"என்னடி பிள்ளை நீ கதைக்கிறாய். இந்த மாப்பிள்ளை வீட்டார் உன்ர கொக்காவை கேட்டிருந்தால் நாங்கள் கட்டிக் குடுத்திருப்பமடி. மாப்பிள்ளை வெளிநாட்டிலை எண்ட படியால் அவைக்கு கறுப்புத் தோல் வேண்டாமாம். சிவப்புப் பெட்டை தான் வேணுமாம். எனக்கு பிறந்ததுகளில நீ தானே சிவப்பி. அதனால தான் உன்னைக் கட்டிக் குடுக்க ஓமெண்டனாங்கள்... கொஞ்சம் யோசிச்சுப் பார் பிள்ளை. உந்த 'செல்' அடியில கொப்பா ஒற்றைக் காலை இழந்தாப் பிறகு நாங்கள் எவ்வளவு கஸ்ரப்பட்டனாங்கள். சாப்பாட்டுக்கு வழியில்லாமல் எத்தனை நாள் திண்டாடி இருப்பம். உன்ர கொக்காவையளுக்கு நாங்கள் ஏதும் சேத்து வைச்சனாங்களே. அவையளுக்கு சீதனம் குடுக்கிறதெண்டால் பத்துப் பதினைஞ்சு லட்சம் நாங்கள் வைச்சிருக்கிறமே. இனியும் நாங்கள் மற்றவையளிட்ட கையேந்தி நிற்க முடியுமே...' என்றபடியே கண்களை துடைத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டுச் சென்றாள்.

தாய் கூறியது நிருபாவுக்கு சரியெனவே பட்டது. அவளது தகப்பன் ஒற்றைக் காலுடன், மற்றவர்களைப் போல் வீட்டில் சும்மா இராமல் பக்கத்திலுள்ள சந்தையில் தினமும் தேங்காய் வியாபாரம் செய்தார். அதில் சொற்ப வருமானமே கிடைத்தது.

நிருபாவின் தாய் அதிகாலையில் எழுந்து இடியப்பம் அவித்து வீடு வீடாக கொண்டு போய் விற்பவள். அவர்களிருவருக்கும் கிடைக்கும் குறைந்த வருமானத்தில் அக்குடும்பம் பசியைத் தீர்த்தது.

நிருபா வெளிநாட்டுக்குச் சென்று உழைத்து அனுப்பும் பணத்தில் தான், அவளின் தமக்கைமாரின் கழுத்தில் தாலி ஏறும். தங்கைகள் இருவரும் சந்தோசமாக எவ்வித கஸ்ரமுமின்றி படிக்கமுடியும். இவ்வளவு காலமும் உழைத்து ஓடாய் போன அவளது தாயும் தகப்பனும் இனிமேலாவது சந்தோசமாக இருக்கட்டும் என்ற எண்ணங்களுடன் நிருபா திருமணத்திற்கு சம்மதித்தாள்.

நிருபாவை பார்த்தவுடனேயே மாப்பிள்ளை வீட்டாருக்கு பிடித்துவிட, அவர்களுக்கு எந்தவித செலவும் இல்லாமலேயே நிருபாவை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

***

போட்டோவில் சங்கரின் உருவத்தை முதலிலேயே பார்த்தபடியால், விமானநிலையத்தில் உடனேயே அவனை அடையாளம் கண்டு கொண்டாள். நிருபாவின் தோள் மீது கை போட்டபடி அன்பாக, சங்கர் அழைத்துக் கொண்டு சென்றான். அவள் அங்கு சென்ற மூன்றாவது நாளே அவர்களுக்கு பதிவுத் திருமணம் நடந்தேறியது.

தன் வாழ்வில் என்றுமே அடைந்திராத சந்தோசத்தை நிருபா கடந்த ஒரு கிழமையாக அனுபவித்தாள். கனடாவிலுள்ள அழகிய இடங்களுக்கு அவளை அழைத்துச் சென்றான். நிருபா கனவில் கூட நினைத்துப் பார்த்திராத அளவுக்கு, அழகிய நகைகள், உடுப்பு வகைகள், உணவுப் பொருட்களை வாங்கிக் கொடுத்தான். எந்நேரமும் அவளருகில் இருந்து அவளை அன்புக் கடலில் மூழ்கடிப்பான். இந்த மகிழ்ச்சியான வாழ்க்கை கனவு போல கலையும் என்று நிருபா எண்ணியிருக்க மாட்டாள்.

திருமணம் முடிந்து அன்றுதான் சங்கர் வேலைக்குச் சென்றான். இரவு வீடு வரும்போது குடிபோதையில் வந்தான். இந்த நாட்டில் இவை எல்லாம் சகஜம் தானே என நினைத்து அவள் அதனை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இப்பழக்கம் தினமும் தொடர்ந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. சங்கருக்கு வேலை 'லீவு' நாள். என்றுமில்லாதவாறு நீண்ட நேரம் தூங்கிக் கொண்டிருந்தான். அவனை எழுப்பச் சென்ற நிருபா, சங்கரின் கையில் ஏற்றப்பட்டிருந்த ஊசியைக் கண்டு,

எதனையுமே புரிந்து கொள்ள முடியாமல் வாயடைத்துப் போய் நின்றாள். சற்று நேரத்தின் பின் அவனை மெதுவாக எழுப்பினான். அவன் கண் விழித்ததிலிருந்து அவளைப் பார்த்து சிரித்துக் கொண்டேயிருந்தான், எழும்பி தன் பாட்டில் ஓடினான். தன் ஆடைகளை எல்லாம் களைந்து எறிந்தான், தன் தலையில் அடிக்கடி சொறிந்தான், ஊசி வேணும் எனப் புலம்பினான், திடீர் எனச் சத்தமாக அழுதான் பின்னர் மீண்டும் சிரித்தான்... இவ்வாறு தன் நடத்தைகளை சங்கர் வெளிப்படுத்திக்க கொண்டிருந்தான்.

சங்கர் போதை வஸ்துவுக்கு அடிமையானவன் என்பதை அவள் புரிந்து கொண்டாள்.

பிறழ்வு நடத்தையுடையவர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பது பற்றி நிருபா, பாடசாலை நூலகத்தில் ஒரு முறை வாசித்தமை நினைவு வந்தது. சங்கர் நடத்தையில் பிறழ்வு உடையவன் என நிருபாவால், அவன் நடத்தைகளிலிருந்து ஊகிக்க முடிந்தது. தான் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்று நினைக்கும்பொழுது அவளின் கண்களில் நீர் முட்டி மோதியது.

கொஞ்ச நேர அமைதியின் பின், எழுந்து சென்று சங்கரின் நண்பன் வினோத்தை தொலைபேசியில் அழைத்து, வீட்டுக்கு வரும்படி கூறினாள்.

இனியும் உண்மையை மறைக்கமுடியாது என்பதை உணர்ந்த வினோத், சங்கரின் கடந்த கால வாழ்க்கையைப் பற்றி சொல்லத் தொடங்கினான்.

"சங்கர் கனடாவுக்கு வந்த கொஞ்ச நாளிலேயே மதுவுக்கு அடிமையானான். அதன் பிறகு வெள்ளைக்கார நண்பர்களின் பழக்கம் அவனுக்கு ஏற்பட்டதிலிருந்து ஊசி மூலம் போதை வஸ்தை உடலில் ஏற்றப் பழகிட்டான். போதைவஸ்து இல்லாமல் அவனால் வாழமுடியாது என்ற நிலை வந்தபோது தான் நானும் என்ர ப்ரண்ஸ்சும் சேர்ந்து, சங்கருக்கு கலியாணம் செய்ய ஏற்பாடு செய்தோம். மனைவி என்ற ஒருத்தி வந்தால் அவன் தானாகவே திருந்தி விடுவான் என்ற எண்ணத்தில் தான் உங்களை அவனுக்கு கட்டி வைச்சம். ஆனால் அவன் இப்பவும் இப்படியெல்லாம் செய்வானெண்டு நான் நினைக்கவேயில்லை. என்னை மன்னியுங்கோ" என்றான்.

"இனிமேல் என்ன செய்யமுடியும். இதுதான் என்ர வாழ்க்கை. நான்

இவரோட வாழத்தானே வேண்டும்" என்றாள்.

கலங்கிய கண்களில் ஊரில் நிருபாவின் சகோதரிகளுக்கு திருமண ஏற்பாடு நடைபெறும் காட்சி தெரிகிறது. அவளின் தாய் தந்தையர் மிகவும் சந்தோசமாக இருப்பதாகவும் தெரிகின்றது.

சுய நினைவு திரும்பி வர கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். அவர்களின் சந்தோசத்திற்கு முன்னால் நிருபாவுக்கு, அவளின் பிரச்சினை பெரிதாக தெரியவில்லை.

ஒரு கிழமையாக, தான் சங்கரோடு வாழ்ந்த வாழ்க்கையை அவள் மீட்டிப் பார்த்தாள். சங்கரை பிறழ்வு நடத்தையிலிருந்து மீட்டு அவனோடு சந்தோசமாக வாழ முடியும் என்ற நம்பிக்கையில் சங்கரை அழைத்துக் கொண்டு நிருபா உளமருத்துவமனையை நோக்கி விரைகின்றாள்.□□□

# உன்னை நம்பித்தானே...

'இன்று எப்படியாவது அப்பாவிடம் இந்த விஷயத்தைக் கூறி அவருடைய சம்மதத்தைப் பெற வேணும்' என என் மனம் இறுமாப்புக் கொள்கிறது. இன்ற மட்டுமல்ல கடந்த நான்கு நாட்களாகவே என் மனதில் உந்திக் கொண்டிருந்த இறுமாப்புத் தான் இது.

கடிகாரத்தைப் பார்க்கிறேன்; அதிலுள்ள சிறிய முள் மெதுமெதுவாக மணி ஆறை நெருங்க என் மனதிலும் ஒரு நெருடல் ஏற்படுகிறது. இருளும் தன் நிறத்தை மெதுவாகக் காட்டத் தொடங்குகிறது. பயத்தினால் என் இடது பக்க நெஞ்சு ஒரு நிமிடத்துக்கு எழுபத்திரெண்டு தடவையை விட இன்று கூடத் துடிப்பதை உணர்கிறேன்.

சின்ன வயதிலிருந்தே எனக்கு அம்மாவை விட அப்பாவைத்தான் மிகவும் பிடிக்கும். அவருக்கும் ஐந்து பிள்ளைகள் இருந்தாலும் என் மீது பாசம் அதிகம் தான். பாடசாலை செல்லும் காலத்தில் என் சீருடைகளை தோயத்து தருவது மட்டுமன்றி, என் தலைமயிரைச் சீவி இரண்டாகப் பிரித்து மூன்று பின்னல் பின்னி 'றிபனால்' கட்டி விட்டு, சாப்பாடும் ஊட்டி விடுவார். இப்படியான

அப்பாவிடம் எனக்கு சிறு வயதிலிருந்தே பயம் என்பது இல்லை. என்ன விஷயமானாலும், எது வேண்டுமானாலும் உடனேயே கேட்டு விடுவேன். ஆனால் இந்த விஷயத்தை அப்பாவிடம் கேட்க எனக்கு மனதில் தைரியம் வரவில்லை. கூடவே பயம் தான் வந்தது.

எல்லாப் பெண்களுமே கூடுதலாக இப்படியான விஷயத்தை அம்மாவிடமே சொல்வார்கள். ஆனால் நான் அப்பாவிடம் சொல்வதாக முடிவெடுத்தேன்.

பதினெட்டு வருடமாக நான் அப்பாவிடம் அதிகம் ஏதும் கேட்பதில்லை. நான் கேட்காமலே எனக்கு வேண்டியவற்றை வாங்கித் தருகிறவர். ஆனால் இந்த விஷயத்தை என்னால் கேட்காமல் இருக்க முடியவில்லை. கேட்டால் அப்பா என்ன சொல்லுவாரோ? என்ற பயமும் என்னிடம் துளிர் விட்டிருந்தது. ஆகாலும் அவர் என்னிடம் கோபம் காட்டமாட்டார்.

இவ்வாறு பல எண்ணங்களை என் மனம் கணக்குப் போட்டுப் பார்க்கையில் என் தங்கை " அக்கா" எனக் கூப்பிட்ட குரலுக்கு திடுக்கிட்டு சுய அறிவு பெற்றேன். திரும்பவும் கடிகாரத்தைப் பார்க்கிறேன். மணி ஆறரையைக் காட்டிற்று. தங்கையை கேட்கிறேன், " அப்பா வந்திட்டாரோ?" என.

"ஓமக்கா" எனக்கூறி விட்டு அவள் தனது அறைக்குள் ஓடி மறைகிறாள்.

எங்கள் வீட்டில் மூன்று அறைகள் மட்டுமே உண்டு. அதன் முன்னால் ஒரு 'ஹோல்'. அவ்வளவு தான். இது அம்மாவின் சீதன வீடு.

'அப்பா கை, கால் அலம்பிய பின், சுவாமி அறைக்குள் சென்று திருநீறு பூசி விட்டு வருவார். அப்போது கேட்போமே?' என என் மனம் எண்ணமிட்ட மறு நொடி மாறுகிறது. 'இல்லை, சாப்பிட்ட பின் கேட்கலாம்' என்று...

கடிகாரம் இரவு எட்டு மணியைக் காட்டுகிறது. அப்பா சாப்பிடுகிற நேரம். இடியப்பமும் கறியும் அம்மா கொண்டு வந்து கொடுக்கிறா. அப்பா மெது மெதுவாக சாப்பிட்டு முடிக்கின்ற தருணம், நான் மெதுவாக அவர் பக்கத்தில் உள்ள கதிரையில் அமர்கிறேன். நான் தயங்கி இருப்பதைக் கண்டு அவரே "என்னம்மா?" எனக் கேட்கிறார். அவர் கேட்ட விதத்தில் என் மனதில் புதிய தெம்பு பிறக்கிறது.

"அப்பா, நான் உங்களிடம் ஒரு விஷயம் சொல்லப் போறன்"

"என்னம்மா?"

"அப்பா... நான்... நான்... " என் வார்த்தைகளைப் பிரசவிக்க முடியாமல் திணறுகிறேன்.

"என்னம்மா? தயங்காமல் சொல்லு"

"அப்பா... நான் ரவி என்ற ஒருவரைக் காதலிக்கிறேன். அவர்கள் வீட்டில் எமது காதலை ஏற்றுக் கொண்டு விட்டினம். நீங்கள் தான் அப்பா 'ஓ.கே.' சொல்ல வேணும்".

நான் சொன்ன மறு நிமிடமே என்னை நினைத்து நானே வியக்கிறேன். 'நானா இப்படிக் கதைத்தேன், இது காதல் தந்த தைரியம் தான்...'

அப்பா திகைத்துப் போய் பேசாமல் மௌனமாக இருக்கிறார்.

எங்களுடைய இந்த சம்பாஷணையில் அம்மாவும் நுழைகிறா.

"என்னடி பிள்ளை நீ சொல்கிறாய். எங்கட குடும்ப நிலையை நீ யோசித்துப் பார்த்தனியே! உனக்கு ஒரு தங்கச்சி இருக்கிறாள், மூன்று தம்பிமார் இருக்கிறாங்கள். நீ பொறுப்பில்லாமல் காதல், கீதல் எண்டுறாய்"

"என்னம்மா நீங்கள், என்ர வாழ்க்கையைப் பற்றிக் கொஞ்சமும் யோசிக்காமல் அவையளைப் பற்றியே கதைக்கிறியள்"

"உன்னை நம்பித் தானேயடி இந்தக் குடும்பம் இருக்குது. உன்ர தம்பி, தங்கையைப் படிப்பிக்க அப்பாவால் முடியாதடி. அவரின்ர உழைப்பு சாப்பாட்டுக்கு மட்டுமே போதுமாக் கிடக்கு, நீ வெளிநாட்டுக்குப் போனால் தான் எங்கட குடும்பம் தழைக்கும்"

"என்ன! வெளிநாட்டுக்குப் போகச் சொல்றியளோ? அம்மா, நான் போகமாட்டன். அங்க போய் என்ர வாழ்க்கையைச் சீரழிக்கமாட்டன்"

"என்னடி சொல்றாய்? அப்ப எங்கட நிலை என்னடி?"

"அம்மா! வெளிநாட்டுக்குப் போய்த்தான் எங்கட குடும்பத்தை நல்லாக்க வேண்டுமெண்டு இல்லையம்மா. தம்பியவன்களும் நல்லாப் படிப்பான்கள் தானே. எப்படியாவது கஸ்டப்பட்டு நான் ஒரு வேலைக்குப் போறன். அவங்களை நல்லாப் படிப்பிக்கிறன். பிறகு அவங்கள் நல்ல நிலைக்கு வந்திடுவான்கள் தானே!"

"என்ன பிள்ளை கதைக்கிறாய்? அவங்கள் எப்ப படிச்சு உழைக்கிறது. நாங்கள் எப்ப வசதியா வாறது" இது அப்பாவின் வாதம்.

"அப்பா, வெளிநாட்டுக்குப் போறவை எல்லாரும் அங்க சந்தோசமாகவே இருப்பதில்லை. அவையள் ஒரு இயந்திரம் மாதிரியல்லோ இயங்கினம். எங்கள மாதிரி சந்தோசமாக அவை இருக்கிறதில்லை. இதையெல்லாம் நான் சொல்லியோ உங்களுக்குத் தெரிய வேணும். என்ர நிலையைக் கொஞ்சம் விளங்கிக் கொள்ளுங்கோ. பிளீஸ் அப்பா..."

"நீ என்ன சமாதானம் சொன்னாலும் சரி. நாங்கள் இதை ஏற்கமாட்டம்" என அம்மா முடிவாகக் கூறிய பிறகு இனி நான் கதைத்துப் பயனில்லை என நினைத்து என்ர அறைக்குள் ஓடிச் சென்று கதவைச் சாத்திக்கொண்டு கதிரையில் அமர்கிறேன். திடீரென கறண்ட் கட்டாகி என் அறையை இருள் சூழ்ந்தது. 'இதுபோல என் வாழ்க்கையும் இருட்டாகி விடுமோ' என என் மனம் நடுங்க, கண்ணீர் கண்களிலிருந்து கடலெனப் பாய்ந்தது.

'அப்பாவுக்கும் அம்மாவுக்கும் எப்படி இந்த வெளிநாட்டு மோகம் வந்தது? அவையள் தங்கட நலத்தைப் பற்றி நினைக்கினமே தவிர, என்ர சந்தோசத்தைப் பற்றி யோசிக்கினம் இல்லையே? நான் என்ன செய்வேன் கடவுளே!' எனக் கடவுளின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு உறங்கிவிட்டேன்.

மறுநாள் காலை நான் என் அறையை விட்டு வெளியே வரவில்லை. முகம் கழுவவில்லை. சாப்பிடவுமில்லை. வீட்டில் என் தம்பி, தங்கை பாடசாலைக்குச் சென்றுவிட்டனர் என்பதற்கு அறிகுறியாக அவர்கள் அரவம் அடங்கிற்று. அப்பாவும் வேலைக்குக் கிளம்பிவிட்டார் போலிருந்தது. அம்மா வந்து என்னுடன் எதுவும் பேசவில்லை.

இதுவரை அம்மா என்னைச் சாப்பிடக் கோரவில்லை. என் கைக்கடிகாரம் மாலை ஆறு மணியைக் காட்டுகிறது. 'அப்பா வந்திருப்பார்' என

என் மனம் நோட்டமிடுகிறது. இரவு எட்டு மணி ஆக எனக்கு பசிக்களைப்பால் தூக்கம் கண்ணை வாட்டியது. அந்நேரம் அறைக்கதவு திறக்கும் சத்தம் கேட்டு மெதுவாக எழும்பிப் பார்த்தேன். அம்மா சாப்பாட்டுக் கோப்பையுடன் வருகிறார். கூடவே அப்பாவும் வருகிறார்.

அம்மா மெதுவாக எனக்கு சாப்பாடு ஊட்டி என் தலையைத் தடவுகிறார். சாப்பிட்டு முடித்தபின் அப்பா என்னை ஹோலுக்கு அழைத்துச் சென்று கதிரையில் அமரவைத்து தானும் அமர்ந்தார். சில நிமிடம் அங்கு நிசப்தம் நிலவுகிறது. அதை உடைக்கும் வகையில் அப்பா என்னிடம் என் மாமனார் வீட்டைப் பற்றி விசாரிக்கிறார்.

என் உண்ணாவிரதம் வெற்றியடைந்துவிட்ட களிப்பில் நான் எனக்குள்ளேயே சிரித்துக் கொள்கிறேன்.□□□

# புரிந்துணர்வு

புறக்கோட்டையிலிருந்து பம்பலப்பிட்டிக்கு செல்வதற்கு எந்த பஸ்ஸில் ஏறுவது என்று தெரியாமல் சாந்தன் தன் தங்கை கௌதமியைக் கையில் பிடித்தபடி அரை மணித்தியாலமாக பஸ் நிலையத்தைச் சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருக்கிறான். யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பஸ் இவர்களை கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக இறக்கி விட்டது. இவர்களிருவரும் பம்பலப்பிட்டியிலுள்ள தமது உறவினர் வீட்டில் தங்குவதற்காக அங்கு செல்ல வெண்டும்.

யாழ்ப்பாணத்திலென்றால், எங்காவது செல்ல வேண்டுமாயின், பஸ்ஸிற்கு முன் பக்கத்தில் இடங்களின் பெயர் தமிழிலும், அவ்விடங்களுக்குரிய 'நம்பர்'களும் எழுதப்பட்டிருக்கும். அதனை வைத்தே தெரியாத இடங்களுக்கும் போய் வரலாம். யாழ்பாணம் போலத்தான் இங்கும் இருக்குமென நினைத்து சாந்தன் அனைத்து பஸ்களையும் போய்ப் பார்த்தான். ஆனால் அந்த பஸ்களில் சிங்களத்தில் தான் இடங்களின் பெயர் எழுதப்பட்டிருந்தது. சாந்தனுக்கு சிங்களம் பேசவும் தெரியாது, சிங்களம் வாசிக்கவும் தெரியாது.

என்ன செய்வது என தீர்மானிக்க முடியாது தவித்தான். தனக்கு தெரிந்த யாராவது இங்கு இருப்பார்களா? என்ற சிந்தனையுடன் சுற்றும் முற்றும்

திரும்பித்திரும்பிப் பார்த்தான். ஆனால் அனைத்துமே அறிமுகமில்லாத முகங்கள். யாரிடமாவது 'பம்பலப்பிட்டிக்கு போவதற்குரிய பஸ் எது?' எனக் கேட்க எண்ணியவன், அதை யாரிடம் கேட்பது எனத் தெரியாமல் தவித்தான்.

இனிமேல் இதில் தனியே நின்று சுழலுவதில் பிரயோசனம் இல்லை என்று உணர்ந்தவன், வேறு வழியில்லை என்ற நிலையில் 'ஆட்டோ' பிடித்துப் போகலாம் என்ற நினைப்புடன், ஆட்டோக்கள் நிற்கும் இடத்தைத் திரும்பிப்பார்த்தான். அங்கு ஐந்தாறு 'ஆட்டோக்கள்' நின்றன. அதில் ஒரு 'ஆட்டோ'விலிருப்பவன் தன் தங்கை கௌதமியை வெகு நேரமாக உற்றுப்பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தான். அங்கிருந்த ஏனைய 'ஆட்டோ' ஓட்டுநர்களைப் பார்த்த போது, அவர்கள் பயங்கரமானவர்களாகத் தோற்றமளித்தனர். இவர்களை நம்பி தங்கையை 'ஆட்டோ'வில் கூட்டிச் செல்ல முடியாது என்பதை நினைத்தவனுக்கு பயம் தான் தோன்றியது. 'கௌதமியையும் கூட்டிக் கொண்டு திரும்பி யாழ்ப்பாணமே போய்விடலாம்' எனவும் எண்ணத் தொடங்கினான்.

சாந்தன் மானிப்பாயைச் சேர்ந்தவன். தகப்பன் இல்லாத அவனது குடும்பத்தில் தாய் தான் கஷ்டப்பட்டு இவர்கள் இருவரையும் வளர்த்தாள். சாந்தன் படித்து உழைத்து அவனுடைய தங்கையை கரை சேர்ப்பான் என்று எண்ணியிருந்தாள். ஆனால் சாந்தனுக்கும் படிப்பிற்கும் ஏணி வைத்தாற் கூட எட்ட முடியாது, என்பதை பின்பு விளங்கிக் கொண்டாள். அவனை வெளி நாட்டிற்கு அனுப்பி வைக்க தாய் முடிவு செய்தாள்.

சாந்தனின் பெரியம்மா கொழும்பில் பம்பலப்பிட்டியில் தான் இருக்கிறாள். அவளின் மகளுக்கு 'கனடா' மாப்பிள்ளையுடன் கொழும்பு ஸ்ரீ கதிரேசன் மண்டபத்தில் கல்யாணம். சாந்தனின் தாயின் உடல் நலம் சரியில்லாத காரணத்தால், சாந்தனையும் கௌதமியையும் கலியாணத்திற்கு போகும் படி அனுப்பி வைத்தாள். கலியாண வீட்டலும் கலந்து கொண்டு அதன் பின்னர் தான் 'டோவா' செல்வதற்கும் ஆயத்தங்களைச் செய்து முடிக்க வேண்டும் என்ற நோக்கில் தான் சாந்தன் கொழும்புக்கு புறப்பட்டான்.

கொழும்பிற்கு வருவது சாந்தனுக்கு இது தான் முதல்த் தடவை. கொழும்பில் கைச் செலவுக்கு தாய் கொடுத்தனுப்பிய பதினையாயிரம் ரூபா

'பொக்கற்'றுக்குள் இருக்கிறதா? என்பதை சாந்தன் அடிக்கடி தொட்டுப்பார்த்து உறுதி செய்து கொண்டான். கண்ணை மூடித்திறக்கும் முன்னர் இங்கு பணத்தை களவாடுபவர்களைப் பற்றி நண்பர்கள் சொல்லியனுப்பியிருந்தார்கள். அதனால்த் தான் அவன் அடிக்கடி பணம் வைத்த தனது 'பொக்கற்'றைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். பத்து வருடங்களாக கொழும்பில் வசிக்கும் பெரியம்மாவிடமே, இரண்டு மாதங்களுக்கு முன்னர், கத்தியைக் காட்டி மிரட்டி ஐந்து பவுண் சங்கிலியை பறித்துச் சென்று விட்டார்கள். அந்தப் பயத்தில் சாந்தனின் தங்கையும் தோட்டைத் தவிர வேறெந்த விதமான நகைகளையும் போடாமல்த் தான் வந்திருந்தாள்.

இவர்கள் இவ்வாறு பரிதவித்துக் கொண்டிருப்பதை பார்த்துக் கொண்டிருந்த ஒருவன், இவர்களிடம் வந்து, சிங்களத்தில் இரண்டு, மூன்று கேள்விகளைக் கேட்டான்.

எதுவுமே புரியாமல் இவர்கள் முழித்தார்கள்.

எதுவுமே புரியாமல் இவர்கள் முழிப்பதைக் கண்ட அவன் தமிழிலே கேட்டான். "நான் கொஞ்ச நேரமாப் பாத்திட்டிருக்கேன், நீங்க ரெண்ட பேரும் பஸ்ராண்டையே சுத்திச் சுத்தி வாறீங்க. யாரையாவது தேடுறீங்களா?"

அவன் தமிழிலே கதைத்ததும் சாந்தனுக்கும் கௌதமிக்கும் நெஞ்சம் குளிர்ந்தது. அவன் தலையில் போட்டிருந்த குல்லாவும், அவனது குறும் தாடியும், அவன் போட்டிருந்த உடையும் அவனை ஒரு முஸ்லீம் என வெளிக்காட்டியது. அவன் ஒரு முஸ்லீம் என்பதைப் புரிந்து கொண்ட சாந்தன், அவன் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொன்னான்.

"நாங்கள் யாழ்ப்பாணத்தில இருந்து வாறம். பம்பலப்பிட்டியிலுள்ள எங்கட பெரியம்மா வீட்டிற்குப் போக வேணும். எந்த பஸ்ஸில ஏறுறதெண்டு தெரியல. அது தான் என்ன செய்றது எண்டு தெரியாமல் யோசிச்சுக் கொண்டிருக்கிறம்"

"என்ர பேரு ரஷாக். நான் வெள்ளவத்தையில் இருக்கேன். நான் இப்ப வீட்டுக்குத்தான் போறேன். பம்பலப்பிட்டி போற வழியில் தான் இருக்கு. நீங்க

என்னோடு வாங்க நான் கூட்டிட்டுப் போறன்".

ரஷாக் அப்படிக் கூறியதும், அவனுடன் கூடப் போகலாமா? விடலாமா? என்ற சந்தேகம் சாந்தனுக்கு இருந்தாலும், வேறு வழியின்றி அவனுடன் செல்லத் தீர்மானித்தான்.


பம்பலப்பிட்டிக்கு செல்லும் பஸ்ஸில் சாந்தனையும் கௌதமியையும் ஏற்றி இருத்தி விட்டு, ரஷாக், 'கான்போனில்' யாருடனேயோ சிங்களத்தில் ஒரு விதமாக கதைத்துக் கொண்டிருந்தான். பஸ் 'ஸ்ராட்' ஆனதும், ரஷாக் முன்னுக்குள்ள ஒரு 'சீற்'றில் அமர்ந்து கொண்டான்.

அடிக்கடி ரஷாக் இவர்களிருவரையும் திரும்பிப் பார்ப்பதையும், சிலவேளைகளில் யாருடனோ 'போனில்' கதைப்பதையும் கண்ட சாந்தனுக்கு, அவன் மேல் சந்தேகம் உண்டானது. ரஷாக், தங்களை ஏமாற்றப் போகிறானோ? அல்லது சினிமாவில் வருவது போல, பெரியம்மா வீட்டிற்கு கூட்டிச் செல்கிறேன் என்றவன், எங்காவது தெரியாத ஆள் நடமாட்டம் இல்லாத இடத்துக்கு கூட்டிச் சென்று எங்களைக் கொலை செய்து விட்டு பணத்தை எடுத்துக் கொண்டு சென்று விடுவானோ அல்லது ரஷாக் தன் கூட்டத்தினரை ஒரு இடத்திற்கு வரச் சொல்லி விட்டு கௌதமியைக் கடத்திச் செல்லத்தான் 'போனில்' கதைக்கிறானோ? ஒன்றும் விளங்காமல் சாந்தன் குழம்பினான். கௌதமி அழகானவள் என்பதால் அவளை கூடாத இடத்திற்கு அழைத்துச் சென்று விற்று விடுவானோ என பல விதமாக கற்பனை உலகில் சென்று கொண்டிருந்தவனை, கௌதமி 'அண்ணா' என்று அழைத்து சுய நினைவுக்கு கொண்டு வந்தாள்.

பஸ் கொஞ்சத் தூரம் சென்றதும் இடையில் ஒருவன் ஏறினான். அவனின் தோற்றம் அவனை முரடனாகக் காட்டியது. பஸ்ஸில் ஏறியவன் ரஷாக்கிற்குப் பக்கத்தில் நின்று கொண்டு ஏதோ சிங்களத்தில் பேசுவதும் சிரிப்பதுமாக இருந்தான். ரஷாக், சாந்தனையும் கௌதமியையும் காட்டி ஏதோவெல்லாம் சொல்ல, வந்தவனும் இவர்களைப் பார்த்துப் பார்த்து ஏதோ சொல்லிக் கதைத்துக் கொண்டிருப்பதை அவதானித்த சாந்தனிற்கு பயம் அதிகரித்தது. தன் கற்பனைகள் எல்லாம் மெய்யாகி விடுமபோல இருந்தது.

ரஷாக்குடன் சென்றால் நிச்சயம் தமக்கு ஏதோ ஆபத்து வரும் என்று கருதிய சாந்தன் அடுத்த இடத்தில் யாரோ இறங்குவதற்கு மணியடிக்க, பஸ் நின்றதும், ரஷாக் கவனியாத வேளையாகப் பார்த்து சட்டென்று சாந்தன் கௌதமியுடன் இறங்கி விடுகிறான்.

பம்பலப்பிட்டி வந்ததும் ரஷாக், சாந்தனையும் கௌதமியையும் திரும்பிப் பார்த்தவன் அதிர்ச்சி அடைந்தான். "என்மேல நம்பிக்கை இல்லாம அவங்க இடையில் இறங்கிட்டாங்க போல... இந்த நம்பிக்கையீனத்தைத்தானே எல்லோரும் வளர்த்து விட்டிருக்கிறம். அல்லா ! நீ தான் அவங்களுக்கு வழி காட்ட வேணும்." என்ற படி பெரியதொரு பெருமூச்சுடன் தனது இடத்தில் ரஷாக் இறங்கினான். □□□



# விஷ்ணுவர்த்தினி

அரியரத்தினம் விஷ்ணுவர்த்தினி, எனக்கு அவரது எழுத்துக்கள் மூலம் மிகவும் அறிமுகமானவர். அவர் யாழ். பல்கலைக்கழக மாணவி. பார்வதி, ருக்மணி என்னும் பெயர்களிலும் சிறுகதைதகள் புனைந்துள்ளார். இளம் எழுத்தாளரான அவரது பத்துக் கதைகளை உள்ளடக்கி இச்சிறுகதைத் தொகுதி ஜீவநதி வெளியீடாக வெளிவருகிறது. செங்கதிர், யாழ். தினக்குரல், மல்லிகை, ஞானம், ஜீவநதி, படிகள், கதிரவன் ஆகிய சஞ்சிகைகளில் பிரசுரமான சிறுகதைகளே இவை. தன்னைச் சுற்றியுள்ள சமுதாயத்தில் மலிந்து கிடக்கும் மலினங்களைக் கண்டு மனவேதனைப்படுபவராக விஷ்ணுவர்த்தினி தன் சிறுகதைகளுக்குள் தோற்றம் காட்டுகிறார். விஷ்ணுவர்த்தினியின் ஆர்வமும் திறமையும் மேலும் வளர்ந்து வர அனுபவ முதிர்வு ஏற்பட ஏற்பட அவரிடமிருந்து மிகச் சிறந்தபடைப்புக்கள் எமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் இத் தொகுதி தருகிறது.

*யோகேஸ்வரி சிவப்பிரகாசம்*

Caxton Printers, Kalvijankadu.